தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு — அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை: திருவள்ளுவர் ஆண்டு 1991, புரட்டாசி ௨ (17-9-'60). சனிக்கிழமை | இதழ் 14

இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் முனையில் உள்ள தங்கள் துருப்புகளை வட எல்லைக்கு அனுப்பி சீனாக்காரர்கள் உள் நுழையாமல் தடுக்க ஓர் இடைக்கால ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என்று சுதந்திரச் கட்சிப் பொதுச் செயலாளர் திரு எம். ஆர். மசானி யோசனை கூறியுள்ளார்.

செய்திப்பாட்டு

பிச்சைக்காரர் தொல்லைரெம்பப் பெருத்துப் போச்சுங்க—ஆளும்
பெரியவங்க மனசுவச்சா நிறுத்த லாமுங்க !
நச்சுப்பிச்சுனு காருவண்டி நிக்குமெடத்துலே—நம்மை
நாலுபக்கமும் சுற்றிக்கொண்டு பிச்சுப் பிடுங்குறார் !

பிச்சைக்காரர்.........

ஆனைக்காலு வியாதிவந்தவன் ஐயோ சகிக்கலே !—போகும்
ஆளுப்பேரு ஊடேவந்து பிச்சை கேக்குறான்.
ஊனக்கண்ணுப் பொட்டைவந்து ஒருத்தி தோளிலே—கையை
ஊன்றிநடந்து தட்டித்தடவித் துட்டுக் கேக்குறான்.

பிச்சைக்காரர்.........

அழுகிவடியும் குட்டத்தோலன் வந்துநிக்கிறான்—நம்மை
அணுகியணுகிக் காசுகேட்டே அவஸ்தைப் படுத்துறான்.
பிழைத்தொழியக் காசுபோட்டுப் பின்னால் திரும்பினால்—காலைப்
பிடித்துநன்றி சொல்லவர்றான் பொறுக்க முடியலே !

பிச்சைக்காரர்.........

காத்துநின்று பஸ்சுக்காகத் தவங்கி டக்கையில் —வரும்
காரிலிடம் கிடைக்குமோண்ணு கலங்கி நிற்கையில்
வாத்துப்போலோர் சித்ரக்குள்ளன் வந்துநிற்குறான்—கையை
வச்சுநம்ம தொடையைத்தட்டி வணக்கம் செய்யுறான்.

பிச்சைக்காரர்.........

வயசுப்பெண்ணும் கூடவந்து ரயிலிலேறியே—ஐயா
வயித்துப்பசி தீர்க்கவேணும் தருமப்ரபுவே ! —என்று
துயரக்குரல் எழுப்புவதைப்பார்க்க முடியலே—இந்தத்
துன்பமெல்லாம் நம்மளாலே தீர்க்க முடியலே !

பிச்சைக்காரர்.........

வீட்டுவாசல் படியைத்தாண்டி வெரசா நுழையுறான்—என்ன
வேணுமுன்னு கேட்டாஅம்மா தாயே யிங்குறான்
போட்டுவைத்த கொடியின்மேலே சேலையைக் காணோம்-அந்தப்
பொல்லாப்பய பிச்சைக்காரன் வேலையி தானோ ?

பிச்சைக்காரர்.........

ஆளைப்பார்த்தா வீமசேனன் போலிருக்குறான் —ஐயோ !
அவனுங்கூட மானம்விட்டுத் தானங் கேக்குறான்.
காளைபோலே இருக்குறேநீ உழைக்ககூடாதா—என்றால்
காட்டமாக வேலைகேட்டு மூக்குடைக் குறான் !

பிச்சைக்காரர்.........

ஒன்றிரண்டு காசுபோட்டா உசிரைக் காக்குமா —இல்லே
உபத்திரவத்தை வளப்பதுக்கே ஊக்கம் சேர்க்குமா ?
தின்றசோற்றில் மீந்தவற்றை அள்ளிக்கொடுத்ததால்—வறுமை
தீர்ந்துபோயி வாழ்ந்தபேர்கள் யார் இருக்கிறார் ?

பிச்சைக்காரர்.........

ஊருக்கொரு பிச்சைக்காரர் விடுதிவேணுங்க—அங்கே
ஊமைசெவிடு குருடையெல்லாம் சேர்க்க வேணுங்க
ஊருநடுவே பிச்சைகேட்டாப் பிடிக்கவேணுங்க—அவரை
உடனேஅங்கே கொண்டுபோயி அடைக்க வேணுங்க.

பிச்சைக்காரர்.........

—நாகநாதன்.

குறள் விழாக் கவியரங்கம்

6. திருவள்ளுவர் ஓர் அரசியல் அறிஞர்.

கவிஞர். ஆ. ஆனந்தராசன்.

திறம்பாடித் தொடங்குகின்றேன் !

கருவாகும் தாய்மைநிலை கண்டு கண்டு
களியாத பெண்ணுண்டோ ? கவிதை நெஞ்சில்
உருவாகும் திறம்கண்டு உவந்தி டாத
ஒருபுலவன் உண்டோசொல் ? உலகம் எங்கும்
விரிவாகும் உன்புகழின் வெற்றி கண்டே
வியவாத நயவாத தமிழன் உண்டோ ?
திருவாகும் தமிழ்மகவே, தேனே, உன்றன்
திறம்பாடிக் கவிதையினைத் தொடங்கு கின்றேன்.

சிங்கம் ஓய்ந்தது

அலைமுழ்கி முத்தெடுத்தும் ஆவி போன்ற
ஆடைகளை வண்ணமுற அறுத்தெ டுத்தும்
கலைமுழ்கிக் கற்பனையை கருவு யிர்த்தும்
கடல்கிழியக் கலமேறிக் கரையைக் கண்டும்
தலையான நிலையுற்ற தமிழன் இன்று
தன்மானம் இழந்து அந்தோ ! தாழ்ந்து விட்டான்.
உலையாத சிங்கமென உறுத்தெ ழுந்த
ஓர்இனந்தான் இற்றைநாள் ஓய்ந்த தம்மா !

புறம்கண்டான் ! புல்லரைப் புறங்கண்டான் !

அறம்கண்டான் பொருள்கண்டான் இன்பம் கண்டான்
ஆன்றதமிழ்ப் புலவர்களின் அருநூல் கண்டான்
புறம்கண்டான் அகம்கண்டான் புல்லர் தம்மைப்
புறங்கண்டான் தமிழன்எனப் போற்று கின்றோம்
திறங்கொண்டு வாய்ப்பறைகள் சாற்று கின்றோம்
திறந்தோறும் மேடைகளில் பேசு கின்றோம்,
மறம்கொண்ட நாம்ஏனோ மண்ணில் வீழ்ந்தோம் ?
மாண்பிழந்து மதிப்பிழந்து மாளு கின்றோம் ?

என்பதனை எடுத்துரைக்க எவரும் இல்லை
இந்தநிலை போக்கிடவே எழுவார் இல்லை
உண்பதிலும் உடுப்பதிலும் உவகை கண்டோம்
ஒற்றுமையின் பெருமையினை உணர்ந்தோ மில்லை.
அன்புதனின் பெருமையினை ஏட்டில் கண்டோம்
அடிதடியும் பூசல்களும் நாட்டில் கண்டோம்
தன்புகழும் தன்னலமும் குறிக்கோ ளாகத்
தருக்குகிறோம். இதுவோநம் தமிழர் வாழ்வு ?

தயங்காதே தமிழா!

வள்ளுவனை உச்சியிலே வைத்து நாளும்
வாழ்த்துகிறோம் ; வணங்குகிறோம் ; அவன்வ குத்த
நல்லவழிக் கொள்கைகளை நாடி டாமல்
நாவாரப் புகழுவதால் வருமோ நன்மை ?
உள்ளமெனும் பொய்கையிலே ஊறு கின்ற
உண்மையெனும் நன்னீரே உலகம் உய்ய
வள்ளலென வழங்குகிறான் ; அதனை உண்ண
வாராமல் தயங்குவதோ தமிழா சொல்வாய்

நன்றாகும் கல்வியினைக் கேள்வி தன்னை
நல்லறிவின் நலத்தையெலாம் நாளும் நாடிக்
குன்றெனவே உயர்ந்தபெரி யோர்கள் கூடும்
கூட்டுறவால் நன்மையெலாம் கூடப் பெற்றே
என்றென்றும் சுற்றத்தைத் தழுவி, மேலும்
எவர்பாலும் கண்ணோடி இசைந்து வாழ்தல்
அன்றோ நம் குறள்வாழ்வு ? அன்பு வாழ்வு ?
அதுவன்றோ அரசியலில் அமைந்த வாழ்வு ?

அறிவுள்ள அரசியல் வேண்டும்

ஆள்வினையோ(டு) ஆன்றவிந்த அறிவின் சால்பும்
அடுக்கிவரும் துன்பத்திற்(கு) அழிந்தி டாமை,
நீள்வினையில் ஊக்கமுடன் நிலைத்து நிற்றல்,
நெடுமறதி இல்லாமை, நினைப்பில் சொல்லில்
சூழ்வினையில் சோர்வின்மை, சொல்லில் வன்மை
சுற்றியுள்ள இடம்காலம் வலிய றிந்து
மேல், வினையில் தெளிந்திடுதல் இன்னோ ரன்ன
மேலறிவே அரசியலில் வேண்டும் என்பான்.

பல்குழுவும் பாழ்செய்யும் பகையும் இல்லாப்
பண்பினதே நாடென்றும், பாவி யாகும்
கொல்பசியும் கொடும்பிணியும் கூடி டாமல்
குலவுவதே நாடென்றும் கூறு கின்றான் ;
தொல்பசியும் தொலையாத துயர நோயும்
தொடர்கின்ற பிணக்கையுமே இங்கு கண்டோம்.
வள்ளுவனார் கண்பட்ட வளநா டெங்கே ?
வறுமைக்கே கொள்கலனும் இந்நா டெங்கே

ஊழல் ஒழிக்கும் வழி குறள்வழி

அரசியலில் காண்ப தெலாம் ஆர வாரம் ;
ஆள்வினையும் தொண்டுளமும் அங்கே இல்லை ;
முரசம்என ஆர்ப்பரித்து முழங்கு கின்றார்
முன்னேற்றச் செயல்புரிய முனைவார் இல்லை ;
உரைசெயவே ஒண்ணாத ஊழல் எல்லாம்
உண்டாமே அரசியலில் ; இவற்றை யெல்லாம்
சரிசெய்து நல்லரசு சமைக்க வேண்டின்,
சாற்றுகிறேன், குறள் வழியைச் சாரு வீரே.

அணிஅணியாய், மணிமணியாய் அருங்க ருத்தை
ஆராய்ச்சிக் கண்ணாலே அரித்தெ டுத்துத்
தனிநூலாய் முப்பாலாய்த் தமிழர் பண்பு
தனைக்காட்டும் சான்றாகத் தந்து சென்றான் ;
பிணியாகும் நிலையிருந்தும் மருந்தைக் கையில்
பெற்றிருந்தும் பேசாமல் இருக்கின் றோமே.
இனியேனும் குறள்வழியில் இசைந்து செல்வீர்
எனவேண்டி அமைகின்றேன். வணக்கம் நன்றி.

வாழ்த்து

வாழ்வியல் வகுத்து ரைக்கும்
வள்ளுவம் வாழ்க ! வாழ்க !
ஆள்வினைச் செல்வர் வாழும்
அருநகர் மக்கள் வாழ்க !
தாழ்விலாப் பணிகள் செய்யும்
தனிக்குறட் கழகம் வாழ்க ;
நாளுமே எனைவ ளர்த்த
நற்றமிழ் அன்னை வாழ்க ;

கண்ணதாசன் பின்னுரை

அரசியலில் வள்ளுவனார் அறிஞர் என்னும்
அழகுதமிழ்க் கவிபாடிக் கவிஞர் போனார்
முரசொலித்த மூவேந்தர் வாழ்ந்த நாளில்
முறைவகுத்த வள்ளுவரைத் தந்தார், இன்றோ
அரசிருக்கும் எண்மர்தமிழ் அறிந்தார் அல்லர்
அதனிடத்துப் பற்றுதலும் உடையா ரல்லர்
குறையுடையார் ; முறையறியார் ; வாழவைக்கும்
குணமில்லார் வள்ளுவரைப் புரிவ தென்றோ ?

வெண்பாப் போட்டி-6.

★

ஈற்றடி

பார்த்தானே பாவிப் பயல்.

இறுதி நாள் 24-9-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 17-9-'60 | இதழ் 14

இலட்சியப் பயணம்

இன்று 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் நாள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பதினோராவது ஆண்டு நிறைவுவிழா.

நாட்டு முன்னேற்றத்துக்காக ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் கழகத் தொண்டர்கள் நாடெங்கும் இன்று விழாக் கொண்டாடுகிறார்கள்.

இன்று முதல் ஒரு வாரத்திற்குத் திராவிட நாடெங்கும் திராவிட நாடு விடுதலை வாரம் கொண்டாடப் போகிறோம்.

ஓயாத நர் உழைப்பின் பலனை ஒரு முறை நின்று திரும்பிப் பார்த்துக் கணக்கெடுக்கும் காலம் இது.

வியர்வையைக் கொட்டி—வேண்டும்போது இரத்தத்தையும் சிந்தி உழைத்த வீர மறவர் கூட்டம் தம் உழைப்பின் வெற்றி எவ்வளவு என்று கணக்குப் பார்க்கும் காலம் இது!

காலம் தோற்றுவித்த கழகம் இது!

இப்படியொரு கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று முன்னேற்பாடாகக் கூடி யாரும் திட்டமிட்டு உண்டாக்கிய கழகமல்ல இது.

கழகத்தின் பிறப்பைப்பற்றிய கதையிது!

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடக் கழகத்திலிருந்து தோன்றியது.

ஏன் தோன்றியது?

இப்படிச் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

அங்கே ஒரு தலைவர்.

அவரைத் தந்தையென்று போற்றினார்கள் எல்லோரும்.

அவர் புதுப்புதுக் கட்டளைகள் இட்டார்.

அவருடைய கட்டளைகளைத் தலைமேற்கொண்டு பணியாற்றினார்கள்.

அது தங்கள் கடமையென்று எண்ணினார்கள்.

அவர் எல்லோரையும் மூடர்கள்—அயோக்கியர்கள் என்றுகூட ஏசினார்.

அவருடைய ஏசல்களையெல்லாம் தாங்கிக்கொண்டார்கள்.

தந்தைதானே திட்டுகிறார்!

இப்படித் தங்கள் இதயங்களுக்குச் சமாதானம் கூறிக்கொண்டார்கள்.

கடைசி வரையில் கண்ணியமாக நடந்துகொண்டார்கள் தொண்டர்கள்.

அவர் சர்வாதிகாரமாக நடந்துகொண்டார்.

அந்த சர்வாதிகாரப் போக்கிற்கும் கட்டுப்பட்டு நடந்தார்கள்.

கட்டுப்பாட்டை மீறக்கூடாது என்று உறுதி பூண்டிருந்தார்கள்

தலைவரின் செயல்கள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டார்கள்.

மாற்றார் சுடுசொல் ஒரு பக்கம்.

தலைவர் கடுஞ்சொல் ஒரு பக்கம்.

வேதனை பெரியது.

ஆனால்,

கழக வீரர்களின் பொறுமை அதனிலும் பெரியது.

அந்தப் பெரும் பொறுமைக்கும் ஒரு சோதனை காலம் வந்தது.

தலைவர் கொள்கையை மீறினார். பொருந்தாத் திருமணம் கூடாதென்று கூட்டத்துக்குக் கூட்டம் கூறி வந்த தலைவர் தாமே பொருந்தாத் திருமணம் செய்துகொண்டார்.

எழுபதுக்கும் முப்பதுக்கும் திருமணம்! இப்படிக் கேலி செய்தார்கள் எதிர்க் கட்சிக்காரர்கள்.

எழுபதுக்கும் முப்பதுக்குமா திருமணம்?

இதைப் பொறுக்கமாட்டோம்.

தலைவரே! இது சரியல்ல!

எச்சரிக்கை விடுத்தார்கள் இளைஞர்கள்.

திருமணம் எனது சொந்த விஷயம்

இப்படிச் சொல்லிவிட்டார் தலைவர்,

இள நெஞ்சங்கள் குமுறின.

தலைவர் செய்தாலும் தவறு தவறுதான்!

இடித்துரைத்தார்கள்.

இளைஞர்கள் தவறு செய்தால் இடித்துரைத்துத் திருத்த வேண்டிய பெரியாருக்கு—அவர் செய்யும் தவற்றைச் சுட்டிக் காட்டி இடித்துரைத்தார்கள் தொண்டர்கள்.

அவர் கேட்கவில்லை.

இவர்கள் என்ன சொல்வது? நான் என்ன கேட்பது? இப்படி ஆணவமான பதில் வந்தது.

இனி,

இவர் கீழேயிருந்து நாம் நம் கடமையைச் செய்யமுடியாது.

இவர் கீழேயிருப்பது நம் கண்ணியத்திற்கு ஒவ்வாது.

இவர் கீழேயிருந்து பணியாற்றினால் கட்டுப்பாட்டையும் காப்பாற்றமுடியாது.

இந்த நிலைமையைத் தெரிந்துகொண்ட மறவர்கள் புதுக் கழகம் கண்டனர்.

அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இன்று திராவிடத்திலேயே மிகப் பெரிய கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் ஆளும் கட்சியினர் மருளுகின்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவது கண்டு மாற்றுக் கட்சிக்காரர்கள் வேதனைப் படுகிறார்கள்.

நாட்டிலே எங்கு பார்த்தாலும் கருப்பும் சிவப்புமான கழகக் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன.

வடக்கு வாழ்கிறது-தெற்குத் தேய்கிறது!

மாற்றார் அரசாட்சியால் வந்த வினை இது!

இதை மாற்றாவிட்டால் நமக்கு வாழ்வில்லை.

மாற்றார் ஆட்சி போக வேண்டும். அதற்குத் திராவிட நாடு திராவிடருக்கே யாக வேண்டும்.

இது நமது கொள்கை விளக்கம்.

இதைப் புரிந்து கொண்டவர் கள் நிறைந்து காணப் படுகிறார்கள். அவர்கள் வரிந்து கட்டிக் கொண்டு நம் படை வரிசையிலே வந்து சேருகிறார்கள்

வடக்குக்கு வால் பிடிப்பவர்கள்.

அப்படி வால் பிடித்தால் தான் பதவியிலே அட்டை போல் ஒட்டிக் கொண்டு இருக்கலாம் என்று எண்ணமிடுபவர்கள்.

தங்கள் வாழ்வே பெரிதென்று எண்ணுபவர்கள்,

இவர்களெல்லாம் நமது வளர்ச்சியைக் கண்டு அஞ்சுகிறார்கள்.

மேலும் மேலும் நாள்தோறும் வளர்ந்து வரும் கழகத்தை நசுக்காவிட்டால், நாளைக்குத் தங்கள் பிச்சைப் பிழைப்புப் போய்விடுமே என்று அச்சப்படுகிறார்கள்.

அவர்கள் அச்சத்தின் விளைவாக,

முதலில் நம்மை வைது பார்த்தார்கள்.

நம்முடைய தாய் மொழிப்பற்றைச் சுட்டிக் காட்டி மொழிவெறியர்கள் என்றார்கள்.

நம்முடைய நாட்டுப் பற்றைச் சுட்டிக் காட்டி மாகாணப் பித்தர்கள் என்றார்கள்.

நம்முடைய இனப்பற்றை எடுத்துக் காட்டி வகுப்பு வாதிகள் என்றார்கள்.

நம்முடைய புரட்சிக் கொள்கைகளை எடுத்துக் காட்டி நாத்திகர்கள் என்றார்கள்.

ஆனால். மக்கள் நம்மை நன்றாகப் புரித்து கொண்டிருந்த காரணத்தால் இந்தத் தப்புப் பிரசாரங்களால் யாரும் மயங்கவில்லை.

அவர்கள் திட்டத் திட்ட நாம் கொட்டி முழக்கிக் கொண்டு முன்னேறினோம்.

இப்போது பகைவர்களின் அச்சம் பலப்பட்டு விட்டது.

திட்டுவதால் நம்மைத் தேய்த்தழித்துவிட முடியாதென்று கண்ட அவர்கள் வெட்டுவது என்ற புது முறையைக் கையாள ஆரம்பித்து விட்டார்கள்.

நாளுக்கு நாள் நாம் கேட்கும் செய்திகள் பயங்கரமாயிருக்கின்றன.

கொள்கையிலே வேறுபாடுடையவர்களைக் கொன்றொழிப்பது என்று ஆளுங் கட்சியைச் சேர்ந்தோரும், அவர்களைச் சார்ந்தோரும் புறப்பட்டு விட்டார்கள்.

தி. மு. க. தோழர் அடித்துக் கொல்லப் பட்டார்.

மரக்கிளையிலே தி மு. க. தோழர் பிணமாய்த் தொங்கினார்.

காங்கிரஸ் கூட்டத்திலே கேள்விகேட்ட தி. மு. க. தோழர் மர்மச் சாவு.

கழகத்தோழரின் மனைவியைக் காலிகள் உலக்கையால் மண்டையிலடித்துக் கொன்றார்கள்!

இந்தப் பயங்கரச் செய்திகள் இப்படியே வளர்ந்து கொண்டிருக்கின்றன.

இதன் எதிர் விளைவுகள் என்ன ஆகும் என்பதை அந்தக் காலிகளும் அவர்களை ஏவி விடுகின்றவர்களும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்திலே உறுப்பினரா யிருப்பவர்களை யெல்லாம் இப்படியே கொன்றுகுவித்து விடலாமென்று எண்ணுகிறார்களா இந்தக் காலிக ?

ஆட்சியிலிருப்பவர்கள் இந்த அநாகரிகப் போக்கைத் தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்?

சிங்கங்கள் சீறினால் என்ன நடக்கும் என்று தெரியுமா இவர்களுக்கு? கண்ணியத்தை விடக்கூடாது என்று கட்டுப் பட்டு இருக்கும் கடமை வீரர்களின் கோபத்தை எழுப்பக் கூடாதென்று இனியாவது தெரிந்து கொள்வார்களா?

இடையூறுகளைப் பொருட் படுத்தாததால்தான் கழகம் மாற்றார் மருளத்தக்க அளவு வளர்ந்திருக்கிறது

இந்த வளர்ச்சியைக் கண்டு நாம் பெருமை யடைகிறோம்.

ஒருமுறை நாம் வளர்ந்து வந்த பாதையைத் திருப்பிப் பார்த்து, இவ்வளவு தூரம் வளர்ந்து விட்டோமா என்று நாமே ஆச்சரியப்படுகிறோம்.

ஆனால், உண்மையில் இது ஆச்சரியப் படுதற்குரியதல்ல.

நேர்மையான குறிக்கோளைக் கொண்டு, கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நெறி முறைகளின் வழிநின்று பாடுபடுகின்ற எந்த இயக்கமும் மக்கள் ஆதரவைப் பெறுவது இயற்கையே! அதிசயமல்ல!

அந்த ஆதரவை நாம் பெற்றிருக்கிறோம்.

அந்த ஆதரவை நாம் நாளுக்கு நாள் அதிகமாகப் பெற்று வருகிறோம்.

அந்த ஆதரவின் பலத்தில் நாம் விரைவில் நம் குறிக்கோளில் வெற்றி பெறுவோம்.

இந்த நம்பிக்கை ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகத் தோழருக்கும் இருக்கிறது.

இந்த நம்பிக்கை யிருக்கும் வரையில் நம்மை யாரும் அசைக்க முடியாது.

இந்த நம்பிக்கையினால் ஏற்படும் உறுதி நம் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்.

திராவிட நாடு திராவிடருக்கே என்ற அந்த இலட்சியம் நாம் நம் வாழ்நாளிலேயே நிறைவேறக் காண்போம்.

ஆம்! இது உறுதி!

ஆம்! இது உண்மை!

பலே சுறுசுறுப்பு!

தமிழ்ப்பித்தன்



காலை மணி பத்து! அலுவலகத்துக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தேன். என் மனைவி மங்கையர்க்கரசி, மாலையில், நேரத்தோடு வீட்டுக்குத் திரும்பும்படி உத்தரவு போட்டாள். அவளுக்கு உறுதி கொடுத்துவிட்டு, துண்டை எடுத்துத் தோளில் அழகுறப் போட்டுக்கொண்டு கிளம்பினேன்.

தெரு முனையில் திரும்பினேன். எதிரே வந்துகொண்டிருந்த தபால்காரர் என்னைப் பார்த்ததும் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுச் சென்றார். நல்ல வேளை! தபால்காரர் என் கண்ணெதிரில் பட்டது! இல்லாவிட்டால், நான் அலுவகம் சென்று, மாலையில் திரும்பி வரும்போதல்லவா கடிதத்தைப் பார்வையிட நேரும்! எனவே மகிழ்ச்சியுடன் கடிதத்தைப் பார்த்தேன். என் நண்பன் சிவராஜ், பெங்களூரிலிருந்து எழுதியிருந்தான.

அன்புள்ள சுந்தரம்!

நெடு நாட்களாக உன்னிடமிருந்து கடிதம் கிடையாது. பாதகம் இல்லை! உனது வழக்கமான சோம்பேறித்தனம் எனக்குத் தெரியும்; அதனால் உன்னை மன்னித்து விடுகிறேன்.

ஆனால், இந்தக் கடிதத்துக்கு உடனடியாகப் பதில் எழுத வேண்டுகிறேன். நீ சென்னை வாசியாக மாறியது கண்டு நான் மனம் மகிழ்கிறேன். அத்துடன், நீ, திரையுலகத் தொடர்பில் வாழ்வது குறித்துப் பெருமையும் அடைகிறேன். நீ அந்தத் துறையில் இருப்பதனால் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டியதிருக்கிறது.

உதவி என்றவுடன், யாருக்காவது நடிக்கும் வாய்ப்பை வாங்கித் தருமாறு கேட்டு உன்னைத் தொந்தரவு செய்யப் போகிறேன் என்று பயப்பட வேண்டாம். நீ எனக்காகச் செய்ய வேண்டியதெல்லாம் 'சிரம தானமே' தவிர வேறொன்றும் இல்லை!

எனது தங்கை மணமாகும் பருவத்தில் இருக்கிறாள் என்பது உனக்குத் தெரியும். சென்னையில் உள்ள மோகினி ஸ்டுடியோவில் உதவிப் படப் பிடிப்பாளராகப் பணியாற்றும் திருநாவுக்கரசு என்பவருக்கு என் தங்கையைப் பெண் கேட்கிறார்கள். இங்கு விசாரித்ததில் அவர் குணம் உடையவர் என்றும் நல்ல ஊதியம் பெறுகிறார் என்றும் தெரிய வந்தது. நீ படப்பிடிப்பு நிலையங்களுடன் தொடர்பு கொண்டுள்ளதனால், மேற்சொன்ன திருநாவுக்கரசுபற்றி மேலும் தகவல்கள் கொடுத்தால் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

விரைவில் உனது பதிலை எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,
சிவராஜ்.

அலுவலகத்துக்குச் சென்றேன். சுறுசுறுப்பாகப் பணியாற்றினேன். மாலை நான்கு மணிக்கே அலுவலகத்தை விட்டுப் புறப்பட நினைத்தேன். ஆனால், எதிர்பாராத விதமாகத் தாமதம் ஆகிவிட்டது. ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்டிருந்த சில வேலைகள், அன்றைய தினம் ஓடி வந்து என் மேசை மீது உட்கார்ந்துகொண்டன. ஒரு பதிலும் சொல்ல முடியாமல் அவற்றை மும்முரமாகக் கவனிக்க ஆரம்பித்தேன்.

"மணி ஒன்பதரைச்சு சார்! சாப்பாடு வாங்கி வரணுமா" என்று அலுவலகப் பையன் கேட்டபோதுதான் தன் உணர்வு பெற்றேன். பகல் இரவாகும் அளவுக்கு வேலைகளைக் குவித்து வைத்துக்கொண்டு சோம்பேறித்தனமாகத் திரிந்தோமே என நினைத்து, என்னை நானே கடிந்துகொண்டேன்.

சீக்கிரம் வரச் சொன்ன மனைவியின் மனத்திற்கும் வருத்தத்தை உண்டுபண்ணிவிட்டோம், நண்பனின் கடிதத்தில் உள்ள ஆளை உடனே விசாரிக்க வேண்டும் என்று மனச்சாட்சியிடம் சொல்லி வைத்த வார்த்தையையும் காற்றில் பறக்க விட்டுவிட்டோம். இதை எல்லாம் எண்ணும்போது துக்கம் தொண்டையை அடைத்தது. கண் நீரைச் சொரிய நினைத்தது. அதனை, அப்படியே கைக்குட்டையால் அடக்கிக் கொண்டேன்.

என் உத்தரவுக்காகக் காத்துக் கொண்டிருந்த பையனிடம், "சாப்பாடு வேண்டாமப்பா! நான் வீட்டுக்குப் போறேன்" என்று சொல்லியபடி புறப்பட்டேன். பையன் தயங்கினான்; அவன் தயக்கம் எனக்குப் புரிந்துவிட்டது. "சரி! சரி! சாப்பாடு வாங்கி நீ சாப்பிட்டுக்கோ!" என்று சொல்லியபடி நடையைக் கட்டினேன்!

வீடு திரும்பியதும் 'குடும்ப விளக்கு' என்மீது சற்று எரிந்து விழுந்தது. அதை ஒரு வழியாகச் சமாதானம் செய்துவிட்டு நண்பனின் கடிதத்தை வாசித்துக் காட்டினேன். அவள் என்னைக் கேலி செய்தாள்.

"ஐயோ பாவம்! உங்களை நம்பி, முக்கியமான சமாச்சாரத்தை விசாரிக்கச் சொல்லியிருக்கிறாரே உங்கள் நண்பர்! வேறு யாரிடமாவது சொல்லியிருக்கக் கூடாதா! சரி, இவரை நம்புவதில் பயனில்லை! இவர் முழுச் சோம்பேறி, என்று உங்களைப்பற்றி அவருக்குக் கடிதம் எழுதிவிடுகிறேன்" என்றாள்.

மங்கையர்க்கரசியின் குணம் ஒரு மாதிரியானது விளையாட்டுப்போலச் சொல்வாள்; பிறகு சொன்னபடி செய்தாலும் செய்துவிடுவாள்! உடனே அவளிடம் சரணாகதி அடைந்தேன். மறுநாள் திரைப் படத்துக்கு அழைத்துச் செல்கிறேன் என்று மனமார ஒரு பொய் சொல்லி அவளைச் சமாதானம் செய்தேன்.

★

விளையாட்டுப்போல் ஒரு மாதம் ஆகிவிட்டது. நான் என் நண்பனின் கடிதத்துக்குப் பதில் எழுதவில்லை. விசாரித்தல்லவா கடிதம் எழுத வேண்டும்! நான்தான் விசாரிக்கவே இல்லையே! பிறகு எப்படிக் கடிதம் எழுதுவது!

ஒரு சமயம், 'விரைவில் விசாரித்து விரிவான பதில் எழுதுகிறேன்' என்றாவது ஒரு கடிதம் எழுதலாம் போல் தோன்றியது. மறுகணம், 'இவ்வளவு நாள் ஆகிவிட்டது; இனி விசாரித்துத் தகவல் எழுதுவதுதான் நாகரிகம்' என்று மனத்தின் ஒரு பகுதி நினைத்துக்கொண்டது. இப்படிச் சில நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் திருநாவுக்கரசு வேலை பார்க்கும் படப்பிடிப்பு நிலையம்வரை சென்றேன்; வாசலில் நுழையும் போது, எனக்கு முன்பே எங்கள் அலுவலக நண்பர்கள் வந்து காத்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றேன். அவர்கள் என்னைத் தேடித்தான் அவசரமாக வந்தார்களாம். அவ்வளவுதான், திருநாவுக்கரசைப் பார்க்காமல், அவர்களுடன் திரும்ப நேர்ந்தது.

இவ்வாறு பல நிகழ்ச்சிகள், எனது கடமையை நிறைவேற்ற முடியாதபடி தடை செய்தன. என் அன்பு மனையாளின் ஆணித்தரமான வாதத்தை—அதாவது நான் சோம்பேறி என்ற தத்துவத்தை ஒப்புக்கொள்ள உதவி செய்தன அந்நிகழ்ச்சிகள்.

சிவராஜும் இந்த உண்மையைத் தெரிந்துகொண்டதால் தானோ என்னவோ, எனக்கு மறுபடியும் கடிதமே எழுதவில்லை. நானாவது எழுதலாம் என்றால், என் மனச்சாட்சி, பொறுப்பை நிறைவேற்றாமல் வெறுங் கடிதத்தை எழுதுவது விவேகமல்ல என்று எச்சரித்துக் கொண்டே இருந்தது.

நாட்கள், மாதங்களாக, மாதங்கள் வருடங்களாயின. ஆம்! இரண்டு வருடம் முடிந்தது. என் 'சுறுசுறுப்பை' நினைத்து எனக்கே வெட்கம் வந்துவிட்டது. என்ன ஆனாலும் சரி, எவ்வளவு நேரம் ஆனாலும் சரி, திருநாவுக்கரசைப் பற்றிய தகவலை எப்படியும் அறிந்துவிட வேண்டும் என்ற முறையில், அன்றொரு நாள், அவர் வேலை பார்க்கும் படநிலையத்துக்குச் சென்றேன்.

"திருநாவுக்கரசு இருக்கிறாரா" என்று மேலாளரிடம் கேட்டேன்.

"இன்னும் அரைமணி நேரத்தில் வந்துவிடுவார்! உட்காருங்கள்" என்றார் அவர்.

அங்கே இருந்த நாற்காலியில் அமர்ந்தேன். பையில் இருந்த சிகரெட் வாய்க்கு வரத் துடித்துக்கொண்டிருந்தது. அதன் இச்சையைப் பூர்த்திசெய்வது என்று முடிவு செய்து, வெளியே எடுத்துப் பற்ற வைத்தேன். "புண்பட்ட நெஞ்சத்தைப் புகைவிட்டு ஆற்று" என்று யாரோ சொன்னதாக நினைவு. அதனால் புகையைக் கொட்டிக் கொண்டிருந்தேன். மேற்படி ஸ்டுடியோவில் பணியாற்றும் என் நண்பர் மெய்யப்பன் தற்செயலாக என் கண்ணில்பட்டார். சிறிதுநேரம் அவரிடம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு, திருநாவுக்கரசு பற்றி விசாரித்தேன். அவர் சொன்ன தகவல் என்னைத் தூக்கிவாரிப் போட்டது.

திருநாவுக்கரசு திருமணமானவராம்; பெண் கோவையைச் சேர்ந்தவளாம்; அது மட்டுமல்ல ஒரு வயது நிரம்பிய ஆண் குழந்தை வேறு இருக்கிறதாம்.

மெய்யப்பன் வேறு யாரையோ தவறுதலாகக் குறிப்பிடுகிறாரோ என்று நினைத்தேன். என் சந்தேகத்தைப் புரிந்துகொண்ட அவர், திருநாவுக்கரசு என்ற பெயரில் ஒரே ஒரு ஆள்தான் அந்த ஸ்டுடியோவிலேயே பணியாற்றுகிறார் என்று ஆணித்தரமாகச் சொன்னார். என் முகத்தில் அசடு வழிந்தது. முகத்துக்கு முன்னால் புகையை விட்டு, நிலைமையைச் சமாளித்துக் கொண்டேன்; அடுத்து ஒரு கணம்கூட அங்கே நிற்க முடியாது என்பதை என் உள்ளம் சொல்லிக்கொண்டே இருந்தது. உடனே அவசரமாகப் புறப்பட்டேன்.

"அதோ வருகிறார் சார் திருநாவுக்கரசு" என்று மேலாளர் சொல்லிக் கொண்டிருந்தார். என் அசட்டுத்தனத்தை விளம்பரப்படுத்திக் கொள்ள நான் பைத்தியம் பிடித்தவனா என்ன! அவரது வார்த்தைகள் காதில் விழாததுபோல் சென்றுவிட்டேன்.

என் கரங்கள், திருநாவுக்கரசைப் பற்றிய உண்மையை சிவராஜுக்கு எழுதத் துடித்தன. இரண்டாண்டுகள் பொறுமையாக இருந்தவையல்லவா, துடிக்கத்தானே செய்யும்! உடனே, அஞ்சல் நிலையம்சென்றேன். உணர்ச்சியும் பேனாவும் ஒன்றுக்கொன்று போட்டியிட, வார்த்தைகளை வேக வேகமாக வடித்தேன்.

அன்புள்ள சிவராஜ்!

நெடுநாள் கழித்துக் கடிதம் எழுதுவதற்கு மன்னிக்கவும்.

நிற்க, ஒரு முக்கியமான செய்தியை உனக்கு அவசர அவசரமாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

நீ, விசாரிக்கச் சொன்ன திருநாவுக்கரசு, ஏற்கனவே மணமானவராம். பெண் கோவையைச் சேர்ந்தவளாம். அத்துடன் அவருக்கு ஒரு வயதில் குழந்தையும் உள்ளதாம்.

மேற்கொண்டு விவரங்கள்பிறகு எழுதுகிறேன்.

அன்புள்ள,
சுந்தரம்.

கடிதத்தைத் தபால்பெட்டியில் சேர்த்த பின்புதான் எனக்கு நிம்மதி. ஒரு பெண்ணின் வாழ்வை – அதிலும் நண்பனின் தங்கையின் வாழ்வைக் காப்பாற்றிவிட்ட திருப்தி என அகத்திலும் முகத்திலும் பொலிந்தது.

—8-ம் பக்கம் பார்க்க—



இலக்கியச் சுவை

ருக்மணி இராமநாதன், பி.எஸ்சி.

6. அன்பின் வழி

"அன்பு" இருப்பதாகச் சொல்ப வர், இருந்தும் காட்டாதவர் பலர்.

அன்பு வாழ்வின் உயிர் என்று திரைப்படத்தில் கேட்கலாம்.

அன்பு இல்லாதவன் பிணம், திருக் குறள் இப்படிச் சொல்கிறது.

அன்பு அறத்தோடு சேர்ந்தால் தரமான புகழ் கிடைக்கும், தத்துவ வாதி இப்படிக் கருதுகிறான்.

அன்பின் உயர்ச்சி அழுகையில் முடியும்.

அன்பின் தாழ்ச்சி அழிவில் முடியும்.

இடைபட்ட நிலையில் அன்பு வளர் வதும் இல்லை, தேய்வதும் இல்லை.

இப்படிப்பட்ட சிந்தனைகள் எழுச்சி பெற்ற சமுதாயத்தின் விழிப்புணர்ச் சிக்கு வழிகோலும். அன்புடையவர் போல் நடித்து, அருள் உடையவர் போல் பேசி, ஆக்கமுடையவர் போல் காட்டி அடுத்துக் கெடுப் போர் தமிழகத்தில் அருகிக் காணப் படுகின்றனர். பெருகிவரும் காட் டாற்று வெள்ளத்தை அணைபோட்டு அருவியாய் விழச் செய்வர் – இது மலையில். பாய்ந்தோடும் ஆற்றைப் பாதியிலே தடுத்துப் பாசனத்திற்கு அணையிடுவர்,–இது தரையில்.

அடுத்தவரின் துன்பத்தால் அடக்க இயலா அன்புமழை கண் என்னும் அணை இருந்தும் கரைபுண்டு வழி யும்–இது வாழ்க்கையில். பெற்ற தாய்நாடு பெருமை பெறப் பாடு பட்டால் கற்றோரும், மற்றோரும் போற்றாது போகார். பெருமையும், புகழும் அருமைதான், தியாகத்தின் பலன், உண்மை. இது மட்டும் வாழ் வில்லை. வாழ்வின் அடிப்படையில் வீரம் விலை போவதில்லை. வாழ்வு வாழ வேண்டிய ஒன்று. போரிட்டுப் புகழ் பெறுதல் வாழ்வில் ஒரு பகுதி தான். பெரும்பகுதி வாழ்க்கையில் வாழ்வுதான். வாழ்வு வளம்பெற புகழும் பொருளும் தேவைதான். ஆனால் புறவாழ்வாகிய புகழ்வாழ்வு மட்டும் வாழ்வாகாது.

வாழ்க்கையின் அடிப்படையே அன்புதான். அன்பின் சிறப்பை அறிந்தார் மாட்டு தனிக் கவர்ச்சியே உண்டு. பண்பு எளிதிற் கைவரப் பெறும். அன்பும் பண்பும் நிறைந்த அகவாழ்வே இன்பவாழ்வாகும்.

பொருளும் பொன்னும் தேடுதல் வாழ்வாகுமா? என்ற வினா இரண் டாயிரம் ஆண்டுகட்குமுன் எழுந்தது. வாழ்க்கையின் இடையில் வந்து போகும் செல்வம் இன்ப வாழ் வாகுமா? எதைப் பற்றி எண்ணி னாலும் 'பணம்' என்ற இருபதாம் நூற்றாண்டினராகிய நமக்குச் சங்கத் துச் சான்றோர் சாற்றும் பெரும் உண்மைதான் வாழ்வைத் தெளி வாக்குகிறது.

அவன்–கட்டிளங்காளை. பருவத்துக் கேற்ற பண்பாளன்–கல்வி நெறியிற் கரைபோயவன். பிள்ளைப் பருவம் முதல் அந்தக் கிள்ளை மொழியாளை அறிவான். தக்க பருவம் எய்திய வுடன் அந்த அழகுச் சிலை நிகர் மேனியாளைக் கடிமணம் புரிந்தான்.

மணம் நடைபெற்ற மறுதிங்கள் பணம் தேடப் புறப்பட ஆயத்தம் செய்யலானான். பொருளின் பெரு மையை நன்கு அறிந்தவனல்லவா! இல்வாழ்வை இனிது நடாத்தப் பொருள் வேண்டும் இந்த எண்ணம் ஏற்படல் இயற்கைதான். ஏற்பட்ட உடனே தேரைச் செலுத்திப் பொருளைப் பெற்றுவரப் புறப்படுதல் சங்கத்துத் தலைமகன் பண்பு. அது போலவே இளமை நலம் குன்றாத தலைவி சின்னாட்கள் தலைவனைப் பிரிந்து இருப்பதும் இயல்பு ஆனால் தலைவியைப் பிரியும் நாளில் கண் ணீரும் கவலையும் தலைவனைத் தடுக் கத்தான் செய்யும். இதனையறிந்த தோழி தலைவனுக்கு அறிவுரை கூற முற்படுவாள்.

இங்கும் தலைவனைத் தடுக்க முற் படுவாள்.

இங்கும் தலைவனைத் தடுக்க முற்படுவது தோழியின் சொல்லம்பு தான். தலைவன் தனியனாய் இருந் தான். தோழி தலைவனை நாடிச் சென்றாள். தலைவன் தெரிந்துகொண் டான், நமது செலவிற்குத் தடை வருவதை. என்றாலும் செவி கொடுத் துக் கேட்க முற்பட்டான்.

"பொருள் தேடப் புறப்பட்டுவிடு வீர், இல்லையா?" தோழி கேட்டாள்.

"வாழ்விற்குக் கடையாணி இல்லையா?" தலைவன் மறுமொழி.

"பொருள் எங்கு கிடைக்குமோ? அறிவீரா?" இது தோழி.

"எப்படிச் சொல்ல முடியும்? தேடினால் கிடைக்கும்." மறுமொழி இது.

"உமக்கே தெரியாது. இல்லையா?"

"............"

"சென்றவுடன் பொருளை எடுத்து வரமுடியுமா? கொட்டிக் கிடக் கிறதா?" இதுவும் தோழிதான்.

....

"பொருளற்றார் வாழவில்லையா? அல்லது வாழ முடியாதா?"

தலைவனால் பதில்கூற முடிய வில்லை. தோழிக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. ஆரம்பித்துவிட்டாள்.

"வாழ்க்கை என்றால் என்ன தெரி யுமா? பொருள் தேடுவது மட்டு மல்ல, தலைவரே! பொருளை எப் பொழுதும் எங்கும் எக்காலத்திலும் முயன்றால் கிடைக்கும், பொருள் எந்தப் பருவத்திலும் கிடைக்கும், முயற்சிதான் வேண்டும்.

ஆனால் 'காதல் வாழ்வு' எந்தப் பருவத்திலும் கிடைக்குமா, தலைவரே?

தலைவிக்கு இப்பொழுதே (சுணங்கு) தேமல் வந்துவிட்டதே! பருவத்தை இழந்துவிடலாமா? பொருள் தேடப் போனால் திரும்பிவர எத்தனையோ ஆண்டுகள் ஆகலாம்! பொருள் வேண்டுமளவு கிடைக்க பல ஆண்டு கள் ஆகக்கூடும். பொருள் கிடைத்து விடும்.

நீங்கள் பல ஆண்டுகள் பிரிந் திருந்தால் தலைவியின் இளமை பயன் தராமற் போகுமே?

இழந்த – பருவத்தைத் திரும்பப் பெறமுடியுமா? முடியாதல்லவா?

பொருளைப் பெறமுடியுமோ! எப் பொழுதும் முயன்றால் முடியும் பொருளைக் காரணம் காட்டிப் பிரியா தீர்கள்!

ஒன்றுமே இல்லாதவர்கள், உடுத் துதற்கு முழு உடை இல்லாதவர்கள் பலர் உண்டு. அரை உடை அணிந்த ஏழைகள் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு இளமை நலத்தின் இன்பம் பெறுகின்றனரே! இதைவிட அவர் கள் பொருளைப்பெறப்பிரிவதில்லையே!

இந்த உலக இயற்கையை அறிந்த நீங்கள் முடிவிலா இன்பத்தை உதறி விட்டு, அழியும் பொருளைத் தேடிச் செல்வீர்களா? சொல்லுங்கள்! என்று தோழியின் சொல்லம்பு தலைவனைப் பேசாப் பதுமையாக்கிவிட்டது.

இன்பம் என்பது அன்புவழியில் இளமை நலத்தைப் பருவத்தே பெறு வது என்பதைக் கலித்தொகையில் பதினெட்டாம் பாடல் நமக்குக் காட்டுகிறது.

"அரும்பொருள் வேட்கையி
னுள்ளந் துரப்பப்
பிரிந்துறை சூழாதி
யைய விரும்பிநீ
என்றோ ளெழுதிய
தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற்
சுணங்கு நினைத்துக்காண்
சென்றோர் முகப்பப்
பொருளுங் கிடவா
தொழிந்தவ ரெல்லாரு
முண்ணாதுஞ் செல்லார்
இளமையுங் காமமு
மோராங்குப் பெற்றார்
வளமை விழைதக்க
துண்டோ வுளநாள்
ஒரோஒகை தம்முட்
டழீஇ யொரோஒகை
ஒன்றன்கூ றாடை
யுடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே
வாழ்க்கை யரிதரோ
சென்ற விளமை தரற்கு."

(பாலைக்கலி–18)

அன்புவழியில் முடிவிலா இன்பம் எப்படி என்று கண்டோம். அன்பு வழியில் வாழ்பவருக்குப் பல வேளை களில் தொல்லைகள் ஏற்படுவது உண்டு. அவைகளை அன்புத் தொல்லைகள் என்று மறந்துவிடல் வேண்டும். சில நிகழ்ச்சிகள் மறக்க வும் முடியாததுபோல் புலப்படலாம். கடமை–கண்ணியம் உடையவர்கள் அன்போடு வாழவேண்டும். அன் புடன் வாழுதற்குப் பழகியவர்கள் இந்த உலகில் சாதிக்கமுடியாததே இல்லை என்று துணிந்து கூறலாம்.

ஒரு நிகழ்ச்சியைக் காட்டாகக் கொள்ளலாம். ஏறத்தாழ இரண்டு திங் கட்குமுன் ஒரு படப்பிடிப்பு நிலையத் தில் வேலை நிறுத்தம் ஏற்படலாமோ என்ற நெருக்கடி நிலைமை ஏற்பட் டது. உரிமையாளர்கள் உண்மை யில் நடுங்கிப் பயந்தனர். காரணம்; பல இலட்சங்கள் வீணாகுமே என் பதே. இச்செய்தி ஓர் அன்புடையா ருக்குத் தெரிவிக்கப்பட்டது. கடமை கண்ணியம் உடைய அந்தஅன்புடை யார் தொழிலாளர்களைச் சமாதானம் செய்து வேலை நிறுத்தத்தைத் தன் அன்பால் தடுத்த செய்தி உண்மை யில் பெருமைக்கு உரியதேயாகும்.

அன்பு வழி வாழ வேண்டும் என்ற எளிய முறை வாழ்வில் அரிய செயல் களை முடிக்கும் என்பதில் ஐயமில்லை. அன்புடையார்தான் ஒத்ததை அறிய முடியும். அன்பற்றவர் பிணம் என் கிறார் வள்ளுவர். இலங்கைக்குக் கள்ளத் தோணியில் சென்ற தமிழர் கள் பதினெட்டுப் பேர் பிணமான செய்தி வந்து ஒரு கிழமை ஆகிறது. அதைக் கேட்டுத் துடிதுடித்து எண்ணம் எழுதி அழுத மக்கள் ஒத்ததை அறியும் அன்புடை மக்கள் ஒருகிழமை ஆகியும் வாய் திறந்தால் பதவி போய்விடுமே என்று பொருள் சேர்க்கும் புல்லர்கள் – பணத்தைப் போல் பேசுதற்கு வலிமையற்றவன் கணாளர்கள் இன்னும் தமிழகத்தில் வாழ்கிறார்களே! 'தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பார்களே! இவர்கள் உடல்கூட ஆட, அசைய இல்லையே? இவர்களை எப்படி அழைப்பது என்றால் வள்ளுவப் பெருந்தகை "மற்றையான் செத்தா ருள் வைக்கப்படும்" என்று கூறு கிறார். இவர்கள் வெள்ளை உடை அணிந்தவராயினும் கள்ளத்தனம் உள்ளமைந்த உயிர்ப் பிணங்கள் என்று கடிந்து கூறுவதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்? அன்பு வழி வாழ்ந்த மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் இன்றும் இலக்கியத்தில் நின்று புகழ் பெறு கின்றனர். அன்பு வழி அறிந்தும் துன்புறுத்த முயலும் பிணங்கள் அந்த நூற்றாண்டின் ஒரு பகுதியில் மட்டும் பேர் போக வாழ்கிறது. மரம் செடி கொடிகூடத்தான் தோன்றி–வளர்ந்து–மடிகிறது. அதற்கு வர லாறு இல்லை. அதுபோல மக்கள் ஆறறிவு படைத்தவர்கள் வாழாது அன்பு வழி தொண்டு செய்யும் உள்ளத்தினராய் வாழ்ந்தால் ஆண் டாண்டு காலம் இசைபட வாழ முடியும். அன்பு வழி தொண்டாற்றிப் புகழ்பெற இலக்கியங்கள் வழிகாட்டு கின்றன, அவ்வழியில் நடப்பதற்கு முயல்வோமாக.

அடுத்த கிழமை; "செம்மை நெறி"

மல்லிகைப் பந்தல்

21. விற்ற மாளிகையில் விருந்து

மரகத அம்மாள் "அம்மா!" என்று கூவிக்கதறியதைக் கேட்ட தங்கமும் ராதாவும் அங்கே ஓடி வந்தார்கள். அவர்கள் இருவரும் வேறு படங்களைப் பார்த்துக்கொண்டு வந்தபடியால், மரகத அம்மாள் அந்தக் குறிப்பிட்ட படத்தைப் பார்த்துவிட்டுக் கதறினாள் என்ற விஷயம் அவர்களுக்குத் தெரியாது. ஆனால், அருகே வந்து பார்த்தபோது மரகத அம்மாள் சுவரில் மேலே சற்றுச் சாய்வாக மாட்டப்பட்டிருந்த படத்தையே பார்த்துக்கொண்டிருப்பதையும் அவள் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் சிந்திக்கொண்டிருப்பதையும் கண்டு திடுக்கிட்டார்கள்.

சுவரில் மாட்டியிருந்த படத்தைப் பார்த்த தங்கத்திற்குத் தன் உள்ளத்திலிருந்த திகைப்பை அடக்கவே முடியவில்லை. ராதாவும் பெரிதும் திகைப்படைந்தாள், ஏனெனில், அந்தச் சுவரில் இருந்த படம் ஏறக்குறைய மரகத அம்மாளைப்போலவே இருந்தது. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், மரகத அம்மாள் இன்னும் பத்தாண்டுகளுக்குப் பின்னால் எப்படியிருக்கக்கூடுமோ அப்படியிருந்தது.

யாரேனும் ஓவியன் வரைந்த படமாயிருந்தால், அவன் மரகத அம்மாளைப் பார்த்துவிட்டு, அவள் இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகு எப்படியிருப்பாள் என்று எண்ணிக் கற்பனை செய்து எழுதியதாக இருக்கலாம் என்று சொல்லிவிடலாம். ஆனால், சுவரில் இருந்த படம் கற்பனை ஓவியமல்ல. அசல் நிழற் படம்? ஆம், போட்டோ படம்தான்.

மரகத அம்மாள் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அம்மா என்று கூவியதால், அது மரகத அம்மாளைப் பெற்றெடுத்த அம்மாவாக இருக்க வேண்டும் என்பதை இளம் பெண்கள் இருவரும் எண்ணிப் பார்த்துத் தெரிந்து கொண்டார்கள்.

தன்னைப் பெற்றெடுத்த தாயின் படத்தைக் கண்டவுடன், அவளைப் பற்றிய பழைய நினைவுகளெல்லாம் ஏற்பட்டு மரகதம்மாள் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். அந்தப் படம் ஜமீந்தார் மாளிகையிலே இருக்கக் காரணம் என்ன என்று தங்கம் சிந்தித்துக்கொண்டிருந்தாள். முன்னொரு முறைதான் ஜமீந்தார் வீட்டு வேலைக்காரியுடன் சுற்றிப் பார்த்தபோது இந்தப் படத்தைக் கவனித்ததாகத் தங்கத்திற்கு ஞாபகம் இல்லை.

அந்தப் படத்தில் இருப்பவள் தன் தாயின் தாய் என்று கண்டு கொண்ட தங்கம், இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று எண்ணினாள். ஜமீந்தார் வீட்டுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் ஏதோ உறவு முறை இருக்க வேண்டும் என்று அவள் எண்ணினாள். அதனால்தான் அவர்கள் தன்னிடம் திடீரென்று விசேஷ அன்பு காட்டியிருக்கிறார்கள் என்று அவளுக்குத் தோன்றியது.

எல்லா விஷயங்களையும் உடனடியாகத் தெள்ளத் தெளியத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவளுக்கு ஆவலாயிருந்தது. ஆனால் தன் தாய் இருக்கும் துயரமான நிலையில் அவளைத் தொந்தரவுபடுத்தக்கூடாதென்று அப்போது அவள் எதுவும் கேட்கத் துணியவில்லை.

சிறிது நேரம் அழுதுகொண்டிருந்த மரகத அம்மாள், தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தங்கத்தின் பக்கம் திரும்பினாள்.

"அம்மா!" என்று ஏதோ கேட்கப் போவதுபோல் தங்கம் அழைத்தாள். ஆனால், எந்தச் சொல்லும் அதைத் தொடர்ந்து அவள் வாயிலிருந்து வெளிப்படவில்லை.

"தங்கம், வா! வீட்டுக்குத் திரும்பலாம்" என்று சொல்லிக்கொண்டே மரகத அம்மாள் திரும்பி நடந்தாள். அவளைப் பின் தொடர்ந்து தங்கமும், ராதாவும் சென்றார்கள். தோட்டக்கார சுப்பையாவும் அவர்களோடு வெளியில் வந்தான்.

மாளிகையின் முன் முற்றத்துக்கு வந்ததும், சுப்பையா வெளிக் கதவை இழுத்துச் சாத்திப் பூட்டிக்கொண்டே, "அம்மா! கொஞ்சம் இருங்கள்! வண்டி பூட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன்!" என்றான்.

'இல்லை, நாங்கள் பஸ்ஸிலேயே போய்விடுகிறோம்" என்றாள் தங்கம்.

"இப்போதே மணிநான்காகிவிட்டது. நீங்கள் கடைத் தெருவுக்குப் போவதற்குள் பஸ் போய்விடும்." என்று தோட்டக்காரன் சுப்பையா கூறியதும் அவள் வாயை மூடிக்கொண்டாள்.

தோட்டக்காரக் கிழவன், அவர்களை அங்கே நிறுத்திவிட்டு மாளிகையைச் சுற்றிக்கொண்டு பின் பக்கமாகப் போனான். சிறிது நேரத்தில் ஜல் ஜல் என்று கழுத்து மணி நாதமெழுப்ப, பின்புறத்திலிருந்து ஜமீந்தார் வீட்டு இரட்டை மாட்டு வில் வண்டி-சில நாட்களுக்குமுன் தங்கம் ஓட்டிய அதே வண்டி, மாளிகை முன் வாசல் முற்றத்தில் வந்து நின்றது. மூன்று பெண்களும் வண்டியில் ஏறிக்கொண்டவுடன் சுப்பையா மாடுகளைத் தட்டி ஓட்டினான்.

வண்டி நெய்யூருக்கு வந்து சேர்ந்து கந்தசாமி வாத்தியார் வீட்டின் முன்நின்ற போது, அவர் அப்போதுதான் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்து வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தார். வண்டியிலிருந்து பெண்கள் இறங்கிவந்ததைக் கண்டதும் அவர் முகத்தில் வியப்புக்குறி மேலிட்டது.

அவர்கள் இறங்கியவுடனே தோட்டக்காரக் கிழவன் வண்டியைத் தட்டிக் கொண்டுபோய் விட்டான்.

"மரகதம், ஜமீந்தார் வீட்டுக்கா சென்றீர்கள்? அங்கே யாரும் இல்லையே!" என்று கேள்விக் குறி போட்டுக் கேட்டார் கந்தசாமி வாத்தியார்.

"அங்கே ஒருவரும் இல்லை என்று உங்களுக்குத் தெரியுமா என்று வியப்புடன் கேட்ட மரகதம்மாள், மாளிகை பார்க்கப்போன விஷயத்தைக் கூறினாள்.

பேசிக்கொண்டே அவர்கள் உள்ளே வந்தார்கள்.

"இதோ பாருங்கள்! எல்லாம் எனக்கு ஒரே மர்மமாயிருக்கிறது. ஜமீந்தார் வீட்டிலே என் அம்மாவுடைய படம் இருக்கிறது. ஜமீந்தாருக்கும் என் அம்மாவுக்கும் என்ன சம்பந்தம் என்பதே புரியவில்லை. அவர்கள் வீட்டில் அம்மாவின் படத்தை ஏன் வைத்திருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை என்று சொன்னாள் மரகத அம்மாள்.

"மரகதம்! இதில் என்ன மர்மம் இருக்கிறது? பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது உன் அண்ணனும் ஜமீந்தாரும் நெருங்கிய நண்பர்களாய் இருந்தார்கள் என்பதை நீ மறந்து விட்டாயா? ஜமீந்தாரும் உன் அண்ணனும் ஒன்றாகவே இருந்ததையும், எப்போதும் உன் அண்ணன் ஜமீந்தார் வீட்டிலேயே இருந்து வந்தார் என்பதையும் மறந்து விட்டாயா? முன்னால் இருந்த பெரிய ஜமீந்தார். இவர்களுடைய நட்பைக் கண்டு, உன் அண்ணனுக்காகத் தன் மாளிகையிலேயே ஓர் அறை ஒதுக்கிக் கொடுத்திருந்தார் அல்லவா? அப்போது உன் அண்ணன் உன் அம்மாவின் படத்தை அங்கு கொண்டு போய் மாட்டியிருக்கலாம்'' என்று சொன்னார் கந்தசாமி வாத்தியார்.

அண்ணனுடைய நினைவுகள் மரகத அம்மாளின் மனத்தில் தோன்றியவுடன் அவளுக்குத் தாங்க முடியாத துன்பம் ஏற்பட்டது. அவள் வாய்விட்டு பேச முடியாமல் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்து விட்டாள். கந்தசாமி வாத்தியாருக்கு நாம் ஏன் இந்த விஷயத்தை இப்பொழுது சொன்னோம் என்று ஆகி விட்டது. கட்டுக் கவலைகள் இல்லாமல் ஜமீந்தார் மகனோடு மகனாக ராஜகுமாரன் போல் வாழ்ந்த தன் அண்ணன் கடைசியில் என்ன ஆனரென்றே தெரியாமல் போய் விட்டதை எண்ணி மரகதம்மாள் அழத்தொடங்கி விட்டாள். மரகத அம்மாளுக்குத் தன் தாயிடமும், தாயைக் காட்டிலும் அண்ணனிடமும் பற்றுதல் அதிகம்.

இன்பமாக வாழ்ந்த தன் தாய்- பெற்ற பிள்ளைகளைப் பேணி வளர்த்து ஆளாக்கிவிட்ட அந்த அருமை யன்னை கடைசியில் துன்பந்தாங்க முடியாமல் நெஞ்சு நொந்து நொந்து இறந்து போனதையும் - இளவரசரைப் போல் இருந்த தன் அண்ணன் கடைசியில் வாழ்வில் சலிப்பு ஏற்பட்டு எங்கோ போய் விட்டதையும் என்ன ஆனார் என்று தகவல் இல்லாமல் போய்விட்டதையும் எண்ண எண்ண பழைய நினைவுகளெல்லாம் வந்து அவளைப் படாத பாடு படுத்தின,

எல்லாவற்றையும் எண்ணி யெண்ணி அழுவதைத் தவிர அவளால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை. தன் தாய் அழுவதைக் கண்டு நின்று கொண்டிருந்த தங்கத்திற்கும் நெஞ்சில் துயரம் மூண்டது. அவளுடைய முகத்திலும் துயர உணர்ச்சி ஏற்பட்டது. "அம்மா! அழாதே அம்மா!'' என்று அருகில் நெருங்கி வந்து ஆதரவோடு மரகத அம்மாளின் அருகில் உட்கார்ந்து முகத்தைத் துடைத்து விட்டாள்.

"மரகதம்! பழைய நினைவுகளை மறந்துவிடு. எத்தனையழுதாலும் நடந்தது திரும்பப் போவதில்லை'' என்று ஆறுதல் கூறினார் கந்தசாமி.

இந்தத் துயரக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்ற இராதாவின் மனம் இளகியது. ஆனால் என்ன செய்வதென்று புரியாமல் அவள் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். நெடுநேரத்திற்குப் பிறகு, மரகத அம்மாள் ஒருவாறு மனந்தெளிந்து எழுந்து வீட்டுவேலைகளைக் கவனிக்கச் சென்ற பிறகுதான் அவள் தங்கத்திடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றாள்.

இந்த நிகழ்ச்சி நடந்து ஏறக்குறைய ஓர் ஆண்டு கழிந்து விட்டது. கதலிப் பட்டணம் ஜமீந்தார் மாளிகைக்கு ஜமீந்தாரும் திரும்பி வரவில்லை. விலைக்கு வாங்கியவர்கள் யாரும் கூட வந்து குடியிருக்க வில்லை. சென்னைக்குச் சென்ற அண்ணாமலைப் பண்டிதரிடத்திலிருந்து யாதொரு தகவலுமில்லை.

காலம்பாடு நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

ஒருநாள் ஜமீந்தார் மாளிகைத் தோட்டக்காரன் சுப்பையா கந்தசாமி வாத்தியார் வீட்டுக்கு வந்தான். அவன் கையில் ஒரு கடிதம் கொண்டு வந்திருந்தான். அதை அவன் கந்தசாமி வாத்தியாரிடம் கொடுத்தான். அதை வாங்கிப் பிரித்துப் படித்த கந்தசாமி வாத்தியாரின் முகத்தில் வியப்புக்குறி படர்ந்தது. எதிரில் இருந்த மரகத அம்மாளும் தங்கமும் என்ன விஷயம் என்று தெரிந்து கொள்ள ஆவலாயிருந்தார்கள். கந்தசாமி வாத்தியார் தம் கையில் இருந்த அந்தக் கடிதத்தைத் தங்கத்திடம் கொடுத்து, "படி'' என்றார். தங்கம் படித்தாள்.

அன்புள்ள கந்தசாமி வாத்தியார் அவர்களுக்கு,

வணக்கம்.

நான் என் மாளிகையை என் நண்பர் ஒருவருக்கு விற்றுவிட்டேன். நாளைக் காலை அவருக்கு இந்த மாளிகையை ஒப்படைக்கப் போகிறேன். அந்த நண்பருக்கு இந்த மாளிகையை ஒப்படைக்கும் சமயம் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு ஒரு விருந்து வைப்பதென்று தீர்மானித்தோம். தாங்களும் தங்கள் மனைவியாருடனும் மகள் தங்கத்துடனும் விருந்துக்கு வந்து சிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நண்பர் முருகேசரையும் அழைத்து வரும்படி கேட்டுக் கொள்கிறேன். தங்கத்தின் தோழிப் பெண்ணையும் அவள் விரும்பினால் கூட்டிக்கொண்டு வர வேண்டியது.

இப்படிக்குத் தங்களன்புள்ள
கருணாகரன்,

அழைப்பு விசித்திரமானதாயிருந்தது. கந்தசாமி வாத்தியார் தோட்டக்காரனைப் பார்த்து, 'மாளிகையை யார் வாங்கியிருக்கிறார்கள்?'' என்று கேட்டார் "அது தெரியலிங்க! யாரோ சென்னைப்பட்டணத்துக்காரங்களுக்குத்தான் என்று சொல்லுருங்க!'' என்று சொன்னான் சுப்பையாக் கிழவன்.

"தங்கம், ராதா வருகிறாளா என்று கேட்டுக்கொண்டு வா, நான் முருகேசரைப் பார்த்துவிட்டு வருகிறேன். நாளைக்குப் புறப்பட ஏற்பாடு செய்யுங்கள்!'' என்று கூறிவிட்டு வெளியில் சென்றார் கந்தசாமி வாத்தியார்.

யாருக்கோ மாளிகையை விற்பதற்குத் தங்களுக்கு ஏன் விருந்து வைக்க வேண்டும் என்று அவர்களுக்கு விளங்கவில்லை. இருந்தாலும் ஜமீந்தாரே அழைத்திருக்கும்போது போகாமல் இருப்பது மரியாதையல்ல என்று அவர்கள் போக முடிவு செய்தார்கள்.

தோட்டக்கார சுப்பையா விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

மறுநாள் ஜமீந்தார் மாளிகைக்கு, எல்லோரும் புறப்பட்டார்கள். நடுத் தெருவுக்கு அவர்கள் வந்து பஸ்சுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். கந்தசாமி வாத்தியார், முருகேச வாத்தியார், மரகத அம்மாள், தங்கம் ராதா ஆக ஐந்து பேரும், வேறு நாலைந்து பேரும் நின்றார்கள். பஸ் வந்தது. அந்த வேற்று மனிதர்களில் இரண்டு பேர் வண்டியில் முந்திக் கொண்டு ஏறிவிட்டார்கள். பஸ் கண்டக்டர், நான்கு பேருக்குத்தான் இடமிருக்கிறதென்று கூறினான். உடனே முருகேச வாத்தியார் தான் நின்றுகொள்வதாகக் கூறினார். ராதாவும் தான் நின்றுகொள்வதாகக் கூறினாள். இவர்களில் யாரும் நின்றுகொள்வது மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனால், யாராவது நின்றுகொள்ளத்தான் வேண்டும். யாரை நின்று கொள்ளச் சொல்வதென்று தெரியாமல் அவர்கள் விழித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது பஸ்ஸில் உட்கார்ந்திருந்த ஓர் இளைஞன், முருகேச வாத்தியாரிடம் வந்து, "ஐயா! தங்களில் யாரும் நின்றுகொள்ள வேண்டாம். நான் இறங்கிக்கொள்கிறேன். தயவு செய்து நீங்கள் போய் வாருங்கள்'' என்று கூறினான். முருகேச வாத்தியார் அவனை உற்று நோக்கினார். அவன் யாரென்றே அவருக்குத் தெரியவில்லை. "இல்லை தம்பி, நீ என்ன வேலையாகப் போகிறாயோ. அதற்குத் தடையாக நான் இருக்கக்கூடாது!'' என்று கூறினார்.

"ஐயா! எனக்கொன்றும் அவசர வேலையில்லை. மாலை பஸ்ஸில் போனாலே போதும்! தயவு செய்து தாங்கள் ஏறிக்கொள்ளுங்கள்!'' என்று சொல்லி இறங்கிவிட்டான்.

பஸ் கண்டக்டர் "*சீக்கிரம் சீக்கிரம்*'' என்று அவசரப்படுத்தவே, ராதாவும், முருகேசரும் பஸ்ஸில் உடனடியாக ஏறிக்கொண்டார்கள். பஸ்சும் உடனடியாகப் புறப்பட்டுவிட்டது. கீழே இறங்கிய அந்தப் பையனையே உற்று நோக்கினார் முருகேசர். அவனை எங்கோ பார்த்த மாதிரியிருந்தது. ஆனால் எங்கே எப்போது என்பது தான் நினைவுக்கு வரவில்லை. அவன் யார் என்பதும் தெரியவில்லை.

"வாழ்க்கையில் எப்படி எப்படியோ எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அப்படி நடக்கும் நிகழ்ச்சிகளிலே இது ஒன்று'' என்று தமக்குள் அவர் நினைத்துக் கொண்டார்.

மற்றவர்களுக்கும் கூட அந்தப் பையனை எங்கோ பார்த்தமாதிரியாக நினைவு இருந்தது. தங்கத்திற்கும் ராதாவிற்கும் அவன் குரல் கூடப் பழக்கப்பட்டதாகத் தோன்றியது. ஆனால் எல்லாம் உருப்படியாக இல்லாத ஓர் அனுமானமாகவே போய் விட்டபடியால் யாராலும் அவனை இன்னாரென்று தெளிவாக முடிவு கட்ட முடியாமல் போய் விட்டது.

கதலிப்பட்டணம் கடைத் தெருவில் அவர்கள் காரை விட்டிறங்கி ஜமீந்தார் மாளிகைக்கு நடந்து சென்றார்கள். மாளிகையை நெருங்கி வந்தவுடனேயே அது மிக நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்டிருந்தது அவர்களுக்குத் தெரிந்தது

மாளிகை முழுவதும் புதிதாக வண்ணம் பூசிச் சுண்ணமடித்துப் பார்ப்பதற்குப் புதிதாகக் கட்டப் பட்டதுபோல் தோற்றமளித்தது. எங்கும் வண்ணக் கொடிகள் தலைக்கு மேலே குறுக்கும் நெடுக்குமாகக் கட்டப் பட்டிருந்தன. காம்பவுண்டு வாசலில் இருபுறமும் குலைதள்ளிய வாழை மரங்கள் வைத்துக் கட்டப் பட்டிருந்ததுடன், மாவிலையும் பனங் கூந்தலும் தோரணமாகக் கட்டப் பட்டிருந்தன. மொத்தத்தில் அது ஒரு திருமண வீடுபோல் அலங்காரமாகக் காட்சியளித்தது.

ஜமீந்தார் கருணாகரர் மாளிகையில் எல்லாம் விசித்திரமாக நடக்கும் போலிருக்கிறது என்ற எண்ணத்துடன் தான் அவர்கள் சென்றார்கள். மாளிகையை விற்பவர் அதையலங்கரித்து அதற்கொரு விருந்து வைத்து விற்பது இதுவரை அவர்கள் கண்டுங் கேட்டுமிராத செயலாயிருந்தது.

அவர்கள் மாளிகைக்குள் நுழைந்தவுடன், தோட்டக்காரச் சுப்பையா தான் முன்னால் வந்து வரவேற்றான்.

உள்ளே போய்ப் பார்த்தால், ஆங்காங்கே புதிதாக வந்திருந்த வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் கண்டார்களே தவிர வேறு யாரையும் வீட்டுக்காரர் விருந்தினர் எவரையும் அவர்கள் காணவில்லை. அவர்கள் ஐந்து பேரைத் தவிர வேறு யாரும் இல்லை. எல்லாம் மூடுமந்திரமாக இருக்கிறதென்று நினைத்துக் கொண்டே, கந்தசாமி வாத்தியார் தோட்டக்கார சுப்பையாவை விவரம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று கூப்பிட்டார்.

அவர்கள் கூப்பிட்ட சமயத்தில் சுப்பையாக் கிழவன் அங்கேயில்லை. அவனைக் கண்டு கேட்க வேண்டுமென்ற விசாரித்த போது அவன் எங்கே போனானென்று தெரியவில்லை என்று வேலைக்காரர்கள் சொல்லி விட்டார்கள்.

ஒன்றும் புரியாத கந்தசாமி வாத்தியார், உள்ளே போய்க் கூடம் ஒன்றில் விரித்திருந்த சமுக்காளத்தில் மற்றவர்களோடு உட்கார்ந்தார்.

சுப்பையா வந்தால்தான் மேற்கொண்டு ஏதாவது விவரம் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருந்தபோது மாளிகை முற்றத்தில் மாட்டு வண்டியொன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. உடனே அவர்கள் எல்லோரும் எழுந்து மாளிகை வாசலுக்கு ஓடி வந்தார்கள்.

மாட்டு வண்டியிலிருந்து இறங்கியவர்களைப் பார்த்தவுடன், கந்தசாமி வாத்தியார் முதலியவர்களின் முகத்தில் வெறுப்பும் வியப்புமான உணர்ச்சிகள் தோன்றின.

அவர்கள் முகத்தில் பிரதிபலித்த உணர்ச்சிகளைக் காணாமலோ கண்டும் இலட்சியப்படுத்தாமலோ, வண்டியிலிருந்து இறங்கி வந்து நலம் விசாரித்தான் சுந்தரேசன் அவனுடன் கூடவே கடுகடுத்த முகத்துடன் வந்தாள் அவனுடைய தாயார் குணவதியம்மாள்.

தொடரும்

செய்திச் சுழல்

செப்டம்பர் சிறக்கிறது!

தென்னகத் தலைவர்கள் பிறந்த திருநாட்கள்

அண்ணாவின் பிறந்த தினத்தில் நம் காணிக் கை.

அறிஞர் அண்ணா அவர்களுக்கு செப்டம்பர் 15-ம் நாளுடன் ஐம்பத்தொரு வயது நிறைவடைகிறது. அறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்புயர்வற்ற தலைவர். இந்தத் திராவிடத் திருநாட்டின் தலைசிறந்த அரசியல் வாதிகளிலே ஒருவர். திராவிடப் பெருங்குடி மக்களின் சார்பாக நாம் அவனுக்குப் பிறந்த தின வாழ்த்துக் கூறுகிறோம்.

பள்ளி யாசிரியராக வாழ்வு தொடங்கிய அண்ணாவைத் தந்தை பெரியார் அரசியலில் ஈடுபட வைத்தார். இல்லாவிட்டால் நாம் இன்றைய அண்ணாவைப் பெற்றிருக்கமுடியாது.

நீதிக் கட்சியில், பணக்காரர்கள் பட்டதாரிகளோடு கூடி-அவர்களுடைய மேன்மைக்கும் உயர்வுக்குமாகப் பாடுபட்டு வந்த பெரியாரை ஏழை எளியவர்களுக்குப் பாடுபடும் திசையில் திருப்பக் காரணமாயிருந்தவர் அறிஞர் அண்ணாதான்.

இருபத்தைந்து ஆண்டுகளாகப் பொதுநலப் பணி புரிந்து வரும் அண்ணாவின் தொண்டுகளை நினைத்துப் பார்க்கும்போது நெஞ்சமெல்லாம் நன்றியுணர்வு நிறைகிறது.

மூடர்களாய்க் கோழைகளாய் சூழ்ச்சிகளுக்காட்பட்டுச் சுதந்திரமான நினைப்பு ஏதுமின்றிச் சாகாமல் செத்து வாழாமல் வாழ்ந்துகொண்டிருந்த இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பகுத்தறிவுப் பாதை காட்டிய பகலவன் அவர்.

பட்டி தொட்டிகளிலே மட்டுமல்லாமல், சட்டையிலே அழுக்கேருமல் வாழ்ந்து கொண்டிருந்தவர்களிடையே கூடப் பரவியிருந்த வைதிகக் கருத்துக்களையும் மூட நம்பிக்கைகளையும் முறியடித்தவர் அறிஞர் அண்ணா.

அண்ணா நமக்குக் கிடைத்த ஓர் அருமையான தலைவர். இன்று உலகம் மதிக்கும் அளவு நம் இலட்சியம் வளர்ந்திருக்கிறதென்றால் அதற்குக் காரணம் அண்ணா. அவர் இட்ட கட்டளையைச் செய்ய இலட்சக் கணக்கில் காத்துக் கொண்டிருக்கிறோம், நாம்! இந்த உறுதிமொழியை நாம் அவருக்குப் பிறந்த தினக் காணிக்கையாகச் செலுத்துகிறோம்.

நூருண்டு எய்திய தொழில் மேதை விசுவேசுவரய்யா

விசுவேசுவரய்யா உலகப் புகழ் பெற்ற பொறியியல் தொழில் மேதை. மைசூர் திவானகப் பணியாற்றியவர். தளராத உழைப்பும் திறமையான நிர்வாக சக்தியும் நுண்ணிய அறிவும் நேரிய நடத்தையும் உடைய பெரியார் இவர். இவருடைய நூருவது பிறந்த தின விழா செப்டம்பர் 15-ம்தேதியன்று பெங்களூரில் கொண்டாடப் பட்டிருக்கிறது. இவருடைய பிறந்த நாளையொட்டி இந்தியத் துணைக்கண்ட அரசினர் அஞ்சல் தலை வெளியிட்டிருக்கிருர்கள்.

மைசூரில் பெரிய இரும்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியும், கிருஷ்ண சாகர் அணையைக் கட்டியும், மைசூர் பல்கலைக் கழகத்தை நிறுவியும் பொதுத் தொண்டு புரிந்த இந்தப் பெரியாரை இன்னும் பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துகிறோம்!

எண்பத்திரண்டாம் ஆண்டு எய்திய கிழவர், தந்தை பெரியார்!

திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்தை யடிப்படையாக வைத்துத் திராவிடக் கழகம் தோற்றுவித்த தந்தை பெரியார், இன்று திராவிட நாடாவது வெங்காய நாடாவது என்று கேட்கிருர். அவருடைய பேச்சுக்களிலே நாம் எவ்வளவு தலைகீழான மாறுதல்களைக் கண்ட போதும், அவர் இந்த நாட்டுக்கு அடிநாள் தொட்டுப் புரிந்து வந்திருக்கிற—புரிந்து வருகிற அரும் பெரும் தொண்டினை மறந்து விட முடியாது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டிலே நிலவி வருகின்ற மூடத்தனத்தையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் விரட்டியடித்த வீரர் அவர். கல்லடிக்கும் சொல்லடிக்கும் அஞ்சாது, கண்ணீர்க் குண்டுக்கும், காலித்தனங்களுக்கும் மருளாது. சிறைச்சாலைகளையும் சிறுநரிச் செயல் புரிவோரையும் கண்டு கலங்காது இடை விடாமல் அறிவுப் பிரசாரம் புரிந்து வரும் அரிமா அவர்.

அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன் இராவணன்போல் இன்று திராவிடத்திற்குக் கிடைத்த ஏந்தல் அந்த வெண் தாடி வேந்தர். அவருடைய எண்பத்து இரண்டாவது பிறந்த நாள் இன்று செப்டம்பர் 17ம் நாள்.

தந்தை பெரியாருக்கும் நம்முடைய அன்பு வாழ்த்துக்களை வழங்குகிறோம்.

தலைமைக் கழக அறிக்கை20/60

தி. மு. கழக

11-வது ஆண்டு நிறைவு விழாவும் திராவிட நாடு விடுதலை வாரமும்

17-9-60-ஆம் நாளிலிருந்து 23-9-60ஆம்-நாள் வரை

கொண்டாட வேண்டுகோள்

பொதுச்செயலாளர் அறிக்கை

திராவிட முன்னேற்றக் கழகப் பதினேருவது ஆண்டு நிறைவையும், திராவிடநாடு விடுதலை வாரத்தையொட்டியும், 17—9—60 ஆம் நாளிலிருந்து 23—9—60-ஆம் நாள் முடிய உள்ள ஒரு வார காலத்தை வழக்கம்போல் திராவிடநாடு விடுதலை வாரமாகக் கொண்டாடுமாறு, கழகக் கிளைகளையும், கழகத் தோழர்களையும், ஆதரவாளர்களையுப் கேட்டுக் கொள்கிறோம்.

கழகத்தின் வரலாற்றை எடுத்துரைத்தல், கொள்கைகளையும் நோக்கங்களையும் தெளிவாக்கிக் காட்டுதல், அரிய செயற்பாடுகளைச் சுட்டிக் காட்டுதல், செயல் முறைத் திட்டங்களை விளக்கிக் காட்டுதல், கழக வளர்ச்சிக்கான வழிவகைகளைக் கோலுதல் போன்ற சீரிய முயற்சிகளில் ஈடுபடுமாறு அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

பொது அமைதிக்கு ஊறு நேரிடாத வகையில் கொடியேற்று விழாக்கள் நடத்துதல், ஊர்வலங்கள் நடத்துதல் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல், கொள்கை விளக்க வெளியீடுகளைவெளியிடுதல், துண்டு அறிக்கைகளைப் பரப்புதல், பொது கூட்டங்களைக் கூட்டுதல் போன்ற பல்வேறு வகையாலும் விழாவைச் சிறப்புறக் கொண்டாடுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அறிவகம்' சென்னை-13
7-9-60

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர் தி. மு. க.

பலே சுறு சுறுப்பு!

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

இரண்டு நாட்கள் சென்றன. என் நண்பனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. நன்றி தெரிவித்திருப்பான் என்பது எனக்குத் தெரியும்; அதனால் அனுயாசமாகத் தபால் உறையைப் பிரித்தேன். கடிதத்தைப் படித்தேன். எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கு அளவே இல்லை! அதில் உள்ள விஷயத்தைச் சொல்ல எனக்கு வலுவில்லை; நீங்களே படித்துக்கொள்ளுங்கள்.

அன்புள்ள சுந்தரம்!

உன் கடிதம் கிடைத்தது. உன்னிடம் இரண்டாண்டுகட்கு முன்பு கேட்டிருந்த வேண்டுகோளை இப்போதாவது நிறைவேற்றி வைத்தாயே, உனக்கு நன்றி!

திருவாளர் திருநாவுக்கரசு திருமணம் ஆனவர் என்பது எனக்குத் தெரியும்! எப்படித் தெரியுமென்று அதிசயப்படுகிருயா? அவர்தானே என் தங்கையின் கணவர்! அவரை நான் அறிந்துகொள்ளாதிருக்க முடியுமா?

உன்னிடமிருந்து கடிதமே இல்லாததால், நான் வேருெரு நண்பர் மூலம் அவரைப்பற்றி விசாரித்துத் தெரிந்துகொண்டேன். எங்கள் வீட்டில் எல்லோருக்கும் பிடித்து விட்டது அவரை.

திருமணம் இனிது நிறைவேறியது. பத்திரிகை அனுப்பவில்லையே என்று நீ நினைக்கலாம். திருநாவுக்கரசு சீர்திருத்த வாதி; அவர் பதிவு மணத்தை விரும்பினர். நாங்களும் தடை சொல்லவில்லை. பெண், கோவையைச் சேர்ந்தவள் என்று சொன்னதற்குக் காரணம் உண்டு. என் தந்தை கோவைக்கு மாற்றலாகிவிட்டதால் கடந்த ஓராண்டுக் காலமாக நாங்கள் கோவையில்தான் இருக்கிறோம்.

எனக்கும் உன் வாசனை வீசியதால்தான் கடிதம் எழுதாமல் இருந்துவிட்டேன். உனக்கு சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்கவும்.

ஒரு முறை குடும்பத்துடன் கோவை வந்து போகவும்.

அன்புள்ள,
சிவராஜ்.

கடிதம் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது. அதன் ஒவ்வோர் எழுத்தும் என்னை எள்ளி நகையாடிக் கொண்டிருந்தது.

தமிழகப் புலவர்குழு

தமிழகப் புலவர் குழுவின் புரட்டாசிக் கலைவிழாக் கூட்டம் தி. வ. 1991, புரட்டாசி 10 (25-9-60) ஞாயிறு காலை 9 மணிக்கு சேலத்திற் கூடும்.

இடம்: - நகராட்சி உயர் நிலைப் பள்ளி. சேலம் திருவள்ளுவர் கழகத்தினர் புலவர் குழுவினரை சிறந்த முறையில் வரவேற்கின்றனர்.

சேலம் பெருமகன் திரு. பி. இரத்தினசாமி பிள்ளை அவர்கள் புலவர் பெருமக்களுக்கு விருந்தளிப்பார். சேலம் நகராட்சியினர் புலவர் குழுவினர்க்கு வரவேற்பளிக்கும் அன்று மாலை 6 மணிக்கு நகராட்சி உயர் நிலைப்பள்ளித் திடலில் நகர மக்களின் வரவேற்புக்குப் புலவர் குழுவினர் விடை கூறுவர்.

தமிழ் மக்கள் அனைவரும் பங்கு பெறலாம் என்று அதன் அமைப்பாளர் திரு. ஆ. பெ. விசுவநாதம் அறிவிக்கிருர்,

ஆங்கிலத்தை அகற்றுவது அறிவுடைமையா?

பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர்

ஒற்றுமை ஒரு குடும்பத்திற்கு வேண்டுவதுபோன்றே, ஒரு நாட்டிற்கும் உலகத்திற்கும் வேண்டும். ஒற்றுமையில்லாக்கால், உயர் திணையென்று உயர்த்திக் கூறப்படும் மாந்தருக்கும் மற்ற உயிரினங்கட்கும் வேறுபாடில்லை. அவ்வொற்றுமையுண்டாக்குவதற்கு ஒரு பொது மொழி இன்றியமையாதது. அது ஆங்கிலமே. ஓர் உலகப் பொது மொழிக்கு இருக்க வேண்டிய இயல்புகளெல்லாம் ஆங்கிலத்திற்கு ஒருங்கே அமைந்துள்ளன. அம்மொழி தன்னேர்ச்சியாக இந்திய ஆட்சி மொழியாகவும் உயர்தரக் கல்வி மொழியாகவும் ஏற்கனவே அமைந்துள்ளமை, தமிழர் பெரும் பேறே. அதை ஆராய்ந்து பாராது விரைந்து அதை அகற்றப் பார்ப்பது, தலையால் வந்த பெருந்திருவைக் காலால் தள்ளுவது போன்றதே. ஆங்கிலத்தின் அரிய இயல்புகளைப் பலர் அறியாதிருப்பதால, அவர்க்கு அவற்றை அறிவிப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பன்னாட்டுக் கழகமோ, ஐக்கிய நாட்டவைப்போ, உலக நாடுகளோ ஒன்று கூடிப் பேசி முடிவு செய்யாமலே, ஆங்கிலம் தானாக, இயற்கையாக, தொடர்ந்து மெல்ல மெல்லத் தன் தகுதியினால் உலக மொழியாகி விட்டது. உலகில் மூன்றிலொரு பங்கு ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளது. ஐக்கிய நாட்டவைப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் மும்மொழிகளுள் ஆங்கிலம் ஒன்று. உலகப் பெருவாரியான நூல்களும் செய்தித் தாள்களும் வெளி வருவது ஆங்கிலத்திலேயே. பல நாடுகள் ஆங்கில மொழியைக் கட்டாயப் பாடமாக ஆக்கியுள்ளன. ஏனை நாடுகளிலும் அது விருப்பப் பாடமாக இருந்து வருகின்றது. ஒருவர் உலக முழுதும் சுற்றி வரத் துணை செய்வது ஆங்கில மொழி ஒன்றே. ஐக்கிய நாட்டவைப்பு நடவடிக்கைகளை மும்மொழியில் நடைபெறினும், ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் அறிவியல் இலக்கியம் எழுதப்பட்டிருப்பினும், உலக மொழியாக ஒன்றுதான் இருக்கமுடியும். அது ஆங்கிலமே, இனிமேல் அதை வேறொரு மொழி மேற்கொள்ளவும் முடியாது.

இற்றை யுலக நாகரிகத்திற்கு அடிப்படையான புதுப் புனைவு நீராவிப்பொறி. அதைக் கண்டுபிடித்தவர் சேம்சுவாட்டு என்னும் ஆங்கிலேயர், அதன் வழியாய்ப் புகைவண்டி புணர்த்தியவரும் சியார்சு தீபன்சன் என்னும் ஓர் ஆங்கிலேயரே. மின்விளக்கு, ஒலிப்பெட்டி, திரைப்படம், வானூர்தி முதலிய பற்பல அறிவியற் புதுப் புனைவுகளை அமைத்த அமெரிக்கரும், ஆங்கில மொழியினரும் ஆங்கிலர் வழியினருமே, ஆதலால். இற்றை அறிவியல் இலக்கியத்திற் பெரும்பகுதி ஆங்கிலத்திலேயே எழுதப் பெற்றுள்ளது.

செருமானியம், பிரெஞ்சியம், இரசியம் ஆகிய பிற மொழிகளிலும் அறிவியல் நூல்கள் எழுதப்பட்டிருப்பினும், அவை அத்துணைப் பெருவாரியானவையல்ல. மேலும், ஏற்கனவே அறியப்பட்டுள்ள தலை சிறந்த மேலை மொழியை விலக்கிவிட்டு, ஏன் ஒரு புதிய ஐரோப்பிய மொழியை நாட வேண்டும்? இது, கையிலிருந்த வெண்ணெயைக் கொடுத்துவிட்டு நெய்க்கலைந்த கதையாகத்தானே முடியும்! ஆங்கிலத்தின் மேம்பாடு தெரிந்திருந்தும், அதை அகற்றி விட்டுச் செருமானியம் போன்ற ஓர் ஐரோப்பிய மொழியிலக்கியத்தைக் கற்கலாமென்று கூறும் இந்தியர், தமக்கு ஆங்கிலத்தின் மீதுள்ள அளவிறந்த, அடாத வெறுப்பையே காட்டுகின்றனர். அத்தகையோர் பித்தரினப் பாற்பட்டவராதலால், பிறரால் பின்பற்றப் பெறத்தக்கவரல்லர் என விடுக்க.

உலகமொழிகள் எல்லாவற்றுள்ளும் சொல்வளமிக்கது ஆங்கிலமே. பல நூற்றாண்டுகளாக ஆங்கிலமக்கள் தலை நாகரிகப் பண்பாட்டில் தலை சிறந்து வந்திருப்பதனாலும், அதற்கேற்பப் பல கருத்துக்களையும் உணர்த்தப் பல்வேறு மொழிகளினின்று இலட்சக்கணக்கான சொற்களைத் திரித்துக் கொண்டதனாலும், ஆங்கில மொழி வியக்கத்தக்க சொல் வளம் பெற்றுவிட்டது.

பண்டைமொழிகளுள் மிகப் பண்பட்டதும் சொல்வளமிக்கதும் தமிழேயாயினும், அதிலும் பழமொழிகளைப் பாகுபடுத்தவில்லை. ஆங்கிலத்திலோ, Aphorism, Axion, Maxim, Apophthegm, Adage, proverb, Byword, saw, என எழு வகையாகப் பாகுபடுத்தியிருக்கின்றனர்.

Pride, vanity, conceit, arrogance, assurance, presumption. haughtiness, insolence என்பன பருப்பொருளில் ஒருபொருட் சொற்களாயினும், நுண்பொருளில் வேறுபட்டன. Sensuous, sensual, sensitive, sensible, sentient, sentimental, என்னும் சொற்களும், bravery, courage, gallantry, prowess, heroism என்னும் சொற்களும் இவைபோன்ற எண்ணிறந்த சொற் குழுக்களும், ஆங்கிலத்தில் மிக நுண்ணிய பொருள் வேறுபாடுடையவை.

நாகரிக வுலகிலுள்ள எல்லாக் கலைகட்கும் நூல்கட்கும் உரிய சொற்களெல்லாம் ஆங்கிலத்தில் உள்ளன. ஞாலத்தில் மேலையாகுத் தெரிந்த எல்லாப்பொருள்களும் ஆங்கிலத்திற் பெயர் பெற்றுள்ளன.

இந்தியில் ஆங்கிலக்குறியீடுகளை மொழிபெயர்த்தற் கேற்ற சொற்களில்லை, ஆங்கிலச் சொற்களைத்தான் அதிலும் ஆளவேண்டும். அதைவிட ஆங்கிலத்தையே வைத்துக் கொள்வது நல்லது.

சட்ட முறையில் முதன் முதல் மக்கள் உரிமை பெற்றது ஆங்கில நாடே. உலக நாடாட்சிக் குழுக்கட்கெல்லாம் தாயாகவும் வழிகாட்டியாகவும் உள்ளது ஆங்கிலப் பாராளுமன்றம். முதன்முதல் அடிமைத்தனத்தை அகற்றியதும், பெண்கள் நலத்தையும் பிள்ளைகள் நலத்தையும் பேணியதும், ஏழைகளின் நிலைமையை உயர்த்தியதும், உழைப்பாளிகளின் பாட்டைக் குறைத்ததும், அகவை (வயது) வந்த இருபாலார்க்கும் குடவோலையுரிமையளித்ததும், குடியேற்ற நாடுகட்கு விடுதலை தந்ததும், இலவசக் கட்டாயத் துவக்கக் கல்வியைப் புகுத்தியதும் அநாரிக மக்களை நாகரிகப்படுத்தியதும், ஆங்கில நாடே. பல நூற்றாண்டுகளாக நாகரிகப் பண்பாட்டிற் சிறந்து வரும் ஆங்கில மக்களின் பண்பட்ட மொழி. இந்தியா போன்ற பிற்பட்ட நாடுகளாற் புறக்கணிக்கப்படத்தக்கதன்று.

சிறியவும் பெரியவுமாக எண்ணூறு நாடுகளாகப் பிரிந்து கிடந்த இந்து தேயம், ஆங்கில ஆட்சியிலேயே ஒரு குடைக் கீழ்க்கொண்டு வரப்பட்டது. நைசாம், மைசூர், திருவாங்கூர் போன்ற உள்நாட்டுச் சீமைகளெல்லாம் படை குறைக்கப்பட்டு ஆங்கிலப் பாதுகாப்பிற்குட்பட்டதினாலேயே, காங்கரசு என்னும் பேராயக் கட்சியியக்கம் அவற்றிற்குள்ளும் புகுந்து பரவவும், ஆங்கிலேயர் நீங்கின பின் அவ்வுள் நாட்டரசுகள் ஒழியவும் இந்தியா (பாக்கித்தான் நீங்கலாக) ஒரு கட்சியாட்சிப் படவும், நேர்ந்ததென்றறிதல் வேண்டும் இன்றும் இந்தியாவை ஒன்றாய் இணைத்துக்கொண்டிருப்பது ஆங்கிலமே. இதை அறியாத இந்தி வெறியர் ஆங்கிலத்தை அகற்றின், நாளடைவில் மொழிவாரி மாகாணங்களெல்லாம் தனி நாடுகளாகப் பிரிந்து போகும் நிலைமையே ஏற்படும்.

இந்தி வெறியரும் வேறு சில வடவரும் ஆங்கிலத்தை அயன் மொழி என்கின்றனர். ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள ஆங்கிலவிந்தியர், இந்தியக் குடிகளும் ஒன்றரைக் கோடியருமாக விருப்பதை அவர் எண்ணிப் பாராதிருப்பது எத்துணைக் குறுகிய நோக்கமும் நடுநிலை திறம்பிய செயலுமாகும்! இது அடிப்படைக் குடியுரிமை மறுப்பேயன்றி வேறன்று.

ஆங்கிலம் இன்று ஆங்கிலேயரால் பேசப்பட்டு வந்தாலும், அதன் மூலமான ஆங்கில சாக்சனியம் (Auglo-saxon) ஒரு காலத்தில் ஆங்கிலேயர்க்கே சிறப்பான மொழியாய் இருந்திருந்தாலும், இற்றை நிலையில், சொல்லமைப்பில், உலகப் பொது மொழியாயுள்ளது. ஆங்கில சாக்சனியச் சொற்கள் மொத்தம் இருபத்து நாலாயிரமே இற்றை யாங்கிலச் சொற்களோ ஏறத்தாழ ஐந்திலக்கமாகும். இவற்றுள், நூற்றுமேனி 80 விழுக்காடு இலத்தீனும் கிரேக்கமும், 10 விழுக்காடு ஆங்கில சாக்சனியம்; எஞ்சிய 10 விழுக்காடு ஏனை மொழிகள். இதை எப்பொருட்டுறைபற்றியும் எடுத்துக் காட்டலாம். இங்குப் பாராளுமன்ற சட்டசபைத் தேர்தலை எடுத்துக்கொள்வோம்.

Latin—இலத்தீன்	
Party,	Act
Majority,	Statute
Minority,	Member
Representative	Portfolio
Election	Minister
Contest	Prime
Vote	Motion
Candidate	Point
File	Order
Nomination	Pass
Constituency	Discussion
Deposit	Deliberation
Presiding	Resolution
Officer	Session
Announcement	Summon
Validity	Prorogue
Declare	Dissolve
Legislation	President
Assembly	Council
Secretariat	
Low Latin — தாழ்(ந்த) இலத்தீன்	
Scrutiny	Cabinet
Country	Adjoinmat
Greak—கிரேக்கம்	
Canvas	Chair(man)
Clerk	Governor
French—பிரெஞ்சியம்	
Parliament	
Italian—இத்தாலியம்	
Ballot	
Old norse—பழ நார்சியம்	
Lower	Law
East Norse—கிழை நார்சியம்	
Booht	
Teutonic—தியூத்தானியம்	
House	(Chair)man
Speaker	Meeting
	(With)draw

—10-ம் பக்கம் பார்க்க—

தானே கற்றுப் பயின்ற சிற்றூர்.

ஆறு குடும்பங்களையுடைய உறிசியே குடும்ப கிராமம் வடசீனவில் ஹோப்பே மாநிலத்தில் மலைகளுக்கிடையே எங்கோ ஒரு மூலையில் அமைந்துள்ளது. இதற்குமுன் பள்ளி என்பதையே அறிந்திராத இக்கிராமம் சொந்தத்தில் ஒரு ஜூனியர் நடுப்பள்ளியை நிறுவிக் கொண்டது

ஒரு மூலையில் தனித்துள்ள இக் கிராமத்திலே முறையான கல்வி ஏற்பாடுகள் இலகுவில் வந்துசேர இயலவில்லை.

1954-ம் ஆண்டில்கூட இந்த நூற்றுக்கு நூறு பேர் வீதம் எழுத்தறியாதவர்களாக இருந்தனர். கூட்டுறவுப் பண்ணையை அது நிறுவிக்கொண்ட ஆண்டு அது. யாருக்கும் எழுதப் படிக்கத் தெரியாததால் அப்பண்ணையில் கணக்காயராக வேலை செய்வதற்கு ஒருவரும் கிடைக்கவில்லை. உறுப்பினர்கள் அவர்களுக்குச் சேரவேண்டிய வேலை நாட்களை சுவரில் கோடுகளிட்டுக் குறித்துக் கணக்கு வைத்துக்கொண்டனர். ஆனால் நாளடைவில்பண்ணையின் வேலைகள் பல தரப்பட்டதாகிய பின் கணக்குகள் ஒரே குழப்பமாகி விட்டன. கம்யூனிஸ்டுக் கட்சி கூறி வந்தது முற்றிலும் உண்மையே என்பதைக்கண்ட அவர்கள் எழுத்துக்கள் பயிலுவதற்காக வகுப்பு ஒன்றை ஏற்பாடு செய்தனர். அக்கிராமத்தில் பள்ளி செல்லும் வயதிலிருந்த இரு குழந்தைகளையும் வேறொரு கிராமத்திலிருந்த பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைப்பதென்று முடிவெடுத்தனர்.

ஆனால் வகுப்பை நடத்துவது யார்? எழுத்தறியாத இளைஞர் ஹவோ சியூ-செங்கைத் தமது ஆசிரியராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். வாரம் இருமுறை சியூ-செங் ஒரு மைலுக்குமேல் நடந்து மலைமீது ஏறி அப்பால் சென்று ஹுவாமு கிராமத்திலுள்ள பள்ளிக்குப் போய் எழுத்துக்கள் பயின்றார். அங்குதான் கற்றவற்றைத் தன் கிராமத்திலுள்ள தனது மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். தன்னால் பதில் கூற முடியாத கேள்வி ஏதாவது எழுந்தபோது, அவர் அடுத்த முறை ஹுவாமு கிராமத்துக்குச் சென்றபோது பதில் தெரிந்துகொண்டு வந்தார்.

விரைவில் கிராமவாசிகள் புதியதொரு வழியை வகுத்துக்கொண்டனர். வெளியே நண்பர்களையோ உறவினரையோ பார்த்து வருவதற்காக கிராமத்தைவிட்டு யார் வெளியூர்களுக்குச் சென்றாலும் அங்கு அவர் சில புதிய எழுத்துக்களைக் கற்றுக்கொண்டு வருவதென்று ஏற்பாடு செய்தனர். ஹுவா கியி-யூவாவின் மகன் தன் பாட்டியைப் பார்க்கப்போவதற்கு அனுமதி கேட்டதும் "அங்கே போய் நீ எத்தனை எழுத்துக்கள் கற்று வரப்போகிறாய்?" என்று கியி-யுவான் அவனைக் கேட்டார். "ஒரு எழுத்து கற்று வருகிறேன்" என்றான் சிறுவன். "என்ன, ஒரு எழுத்துதானா, அது போதாது. குறைந்தது மூன்று எழுத்துக்களாவது கற்று வரவேண்டும், இல்லையேல் நீ போக வேண்டாம்" என்று கூறிவிட்டார். சிறுவனும் அதன்படி மூன்று எழுத்துக்களைக் கற்றுவந்து அவற்றை யாவருக்கும் சொல்லிக் கொடுத்தான்.

வேறு சில முறைகளையும் கையாண்டனர். ஹுவாமு பள்ளியின் ஆசிரியர் உறிசியே குடும்ப கிராமத்தின் எல்லை ஓரத்திலே வேலை செய்வதற்கு அடிக்கடி வருவார். அங்கு வரும்போதெல்லாம் சாப்பாட்டுக்கு அவரை அழைப்பதென்று உறிசியே கூட்டுறவுப்பண்ணை உறுப்பினர்கள் முடிவு செய்தார்கள். சாப்பாட்டிற்காக சொந்தக் கிராமத்துக்குச் சென்றுவரும் நேரத்தை உபயோகித்து அந்த ஆசிரியர் இவர்களுக்கு எழுத்து அறிவித்தார். எப்பொழுதாவது கிராமத்துக்கு அங்காடிக்காரர்கள் வருவது வழக்கம். அவர்களுக்கு சாப்பாடு போட்டு தமக்குச் சில புதிய எழுத்துக்கள் கற்றுக் கொடுத்துப் போகுமாறு கூறுவார்கள்.

இம்முறைகள் மூலம் அவர்கள் எழுத்துக்கள் கற்றுக் கொண்டு 1945ல் உறுவாமு பள்ளி ஆசிரியரிடமிருந்து வாங்கி வரப்பட்ட ஒரு அகராதியை உபயோகிக்கும் அளவுக்கு முன்னேறி விட்டனர். "எந்நேரமும் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்" என்று அவர்கள் அந்த அகராதியை அழைக்கலாயினர். என்றையும்விட பிரயாசையுடன் படிக்கத் தொடங்கினார்கள். 1956-ல் கோதுமை அறுவடை ஆரம்பமாவதற்குள் இக்கிராம வாசிகள் யாவருமே எழுத்தறிவுடையவர் களாகிவிட்டனர். ஒவ்வொவரும் 1500 சீன எழுத்துக்கள் வரை கற்றுக் கொண்டு விட்டார்கள்.

கணக்குகள் எழுதி வைத்துக் கொள்வதற்கும் கடிதம் எழுதுவதற்கும் தெரிந்துவிட்டதென்று சிலர் திருப்தியடையலாயினர். ஆனால் அப்பொழுது பக்கத்து நகரின் கட்சி நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இக்கிராமத்துக்கு வந்து "நீங்கள் ஆரம்ப முயற்சியை மட்டுமேதான் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். சோஷலிசத்தை அமைத்திட வேண்டுமானால், மேலும் கூடுதலாக எவ்வளவோ கலாச்சார, விஞ்ஞான அறிவு அவசியமாகும்" என்று கூறினார்கள். கிராமவாசிகள் விழிப்புற்று தமது முதலாவது ஓய்வு நேர ஆரம்பப் பள்ளியை நிறுவிக்கொண்டனர். கிராமத்தின் ஆறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் இப்பள்ளியில் சேர்ந்துகொண்டனர். இன்னமும் அவர்கள் ஹுவாமு கிராமத்தின் பள்ளி ஆசிரியரின் உதவியையே நாட வேண்டியிருந்தது. அவருடைய சேவைக்குப் பதிலாக அவருக்கு விறகு சேகரித்துக் கொடுத்தனர். கிராமத்தின் இரு முழு நேர மாணவர்கள் விடுமுறையின்போது கிராமத்துக்கு வந்திருந்த காலத்தில் அவர்கள் கனிதம் கற்றுக் கொடுத்தார்கள். 1958ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் இம்மாணவர்களில் ஒருவர் திரும்பி இங்கு வந்து முழு நேர ஆசிரியராகப் பணியாற்றத்தொடங்கினார். பெரு முயற்சி செய்து ஆரம்பப் பள்ளிப் படிப்பு முழுவதையும் ஒரே ஆண்டில் கற்றுத் தெரிந்து கொண்டனர். ஓசை முறை எழுத்துக் களையும் பயின்று கொண்டு விட்டனர். 1959ல் கட்சியின் உதவியுடன் அவர்கள் ஓய்வு நேர ஜூனியர் நடுப் பள்ளியை நிறுவிக் கொண்டனர். இதற்குள் இக்கிராமம் லுலோ கொம்யூனில் சேர்ந்து கொண்டு விட்டது. கிராமத்தின் முழு நேர ஆசிரியர் தனது கல்வி நிலையை உயர்த்திக் கொள்வதற்காக லுலோ கொம்யூன் நிறுவியுள்ள ஓய்வு நேரப் பள்ளிக்குச் சென்று பயின்று வருகிறார். இக் கிராமத்தினர் 100 புத்தகங்களையுடைய நூல் நிலையம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். புத்தகங்களில் தாம் கற்று அறிந்ததைப் பயன்படுத்தி அவர்கள் தமது விளைபொருள் உற்பத்தியை உயர்த்திக் கொண்டுள்ளனர். உற்பத்தி 1958ல் 3,900 ஜின்னாக இருந்தது 1959ல் 9,300 ஜின்னாகவும், மூ ஒன்றுக்கான மக்காச் சோள மகசூல் 1958ல் 300 ஜின்னாக இருந்தது 1959ல் 800 பழ ஜின்னாகவும் உயர்ந்து விட்டன.

ஆங்கிலத்தை அகற்றுவது அறிவுடைமையா ?

—9-ம் பக்கத் தொடர்ச்சி—

English - ஆங்கிலம்

Poll Upper

இலத்தீன், தாழிலத்தீன் ஆகிய இரண்டும் ஏறத்தாழ ஒன்றே

இங்கு ஆங்கில மல்லாத அயற் சொற்களாகக் காட்டப்பட்டவையெல்லாம், அவ்வவ் வயன்வாழி வடிவிலேயே உள்ளவையல்ல; ஆங்கில வியல்பிற்கும் தேவைக்கும் ஏற்பத்திரிக்கப் பெற்றவையாகும்.

எடுத்துக் காட்டு: Pars அல்லது Partis என்பது இலத்தீன் சொல், அதனின்று Part, Party என்னும் ஆங்கிலச் சொற்கள் திரிக்கப்பட்டுள்ளன. இங்ஙனமே பிறவும்.

மேற் காட்டிய சொற்பட்டியினின்று, இற்றை யாங்கிலம் ஆங்கிலேயர்க்குச் சிறப்பாக வுரியதன்றென்பதும், இலத்தீன் சொற்கள் மிகுந்த கலவை மொழியென்பதும், அதை வெறுப்பது இலத்தீன் கிரேக்கம் முதலிய பிற மொழிகளை வெறுப்பதேயாகுமென்பதும், அறியப்படும்.

ஆங்கிலம் ஏற்கனவே ஒன்றரை நூற்றாண்டாக இந்திய ஆட்சி மொழியாக இருந்து வருகின்றது. அதன் தொடர்ச்சியை இந்தியைப் புதுவதாகப் புகுத்தற்கொப்பாகக் கருதுவது, பேதைமையேயாம். இந்தி புதுமொழியாயிருப்பதொடு ஆட்சிக்குத் தகாத புன் மொழியாகவுமிருப்பது கருதற்குரியது.

வடவர் பலரும் தென்னவர் சிலரும் ஆங்கிலத்தை அடிமைப்படுத்திய மொழியாகக் கருதுகின்றனர். ஆங்கிலேயர் தமிழ்நாட்டிற்கு மீட்பராக வந்தனர் என்னும் உண்மையைப் பலர் ஒப்புக்கொள்ளாது போயினும், ஆங்கிலர் ஆட்சியினின்று இந்தியா விடுதலை பெறுதற்கும் அவர் மொழியாகிய ஆங்கிலமே துணையாயிருந்த தென்பதை, எவரும் மறுக்கமுடியாது. ஆங்கிலேயர் கள்ளங்கரவின்றி இந்தியரெல்லார்க்கும் ஆங்கிலக் கல்வி கற்பித்து அறிவு புகட்டினர். அதனால், நாட்டு வரலாற்றையும் ஆட்சி முறைகளையும் குடியுரிமையையும் அறிந்த இந்தியப் பெருமக்கள், தேசிய இயக்கத்தைத் தொடங்கிப் பொதுமக்களைத் துணைக்கொண்டு போராடி ஆங்கில ஆட்சியினின்று விடுதலை வேண்டினர். ஆங்கிலேயரும் படிப்படியாக உரிமையளித்து வந்து இறுதியில் முழு விடுதலையும் முழு மனத்தொடு தாமாக அளித்துவிட்டனர். அதனால், விடுதலை பெற்ற இந்தியாவும் பிரித்தானியச் செல்வாக்குள்ள பொது நல்வாழ்வு நாடுகளுள் ஒன்றாக இருந்து வருகின்றது ஆங்கிலக் கல்வியில்லாவிடின், காந்தியும் நேருவும் போன்ற தலைவரும தோன்றியிரார்; இந்தியாவும் விடுதலை பெற்றிருக்காது. ஆகவே, இந்தியர்க்குக் கண் திறந்ததும், விடுதலை பெற வழி காட்டியதும், ஆங்கிலரொடுபோராடி வெற்றி பெற ஆற்றலுள்ள கருவியாயிருந்ததும், ஆங்கிலமே ஆதலால், ஆங்கிலத்தை அடிமைப்படுத்திய மொழியெனக் கருதுவது அறியாமையேயாம்.

ஒருவர் உலகமெங்கும் சுற்றுதற்கும், அலுவல் பெறுதற்கும், அறிவடைதற்கும் மட்டுமன்றி, பிறரொடு உரையாடுதற்கும் ஆங்கிலம் உதவுகின்றது. கல்வி நிலையங்களிற் கல்லாதவர்கூடக் கேள்வி யறிவைத் துணைக்கொண்டு அயல் நாட்டாரொடு ஆங்கிலத்தில் உரையாடிப் பயன் பெறுகின்றனர்.

மேற்காட்டிய காரணங்களால், ஆங்கிலம் வெளி நாட்டில் மட்டுமன்றி இந்நாட்டிலும் இன்றும் மதிப்பு மொழியாக இருந்து வருகின்றது. ஒருவர் ஓர் இந்திய மொழியில் எத்துணைச் சிறந்த புலவராயிருப்பினும், ஆங்கில மறியாதவராயின் பெரும்பாலும் போற்றப் பெறுவதில்லை. அவர் ஆராய்ச்சியறிவெல்லாம் ஊமையன் கண்ட கனவே. தமிழாசிரியரொடு கல்வி நிலையத் தலைவர்கள் கை குலுக்காமையும்' அரசியலலுவலகங்களில் தமிழில் வினவுவார் விடை பெறுமையும், தமிழுக்கு அல்லது நாட்டு மொழிக்குள்ள அவமதிப்பையும், ஆங்கிலத்திற்குள்ள மதிப்பையுமே காட்டும். தமிழையே கற்பிப்பவராயினும் ஆங்கிலப் பட்டம் பெறுதார் கல்லூரிகளில் அமர்த்தப் பெறுவதில்லை. நாட்டுப்பற்றும் நாட்டு மொழிப்பற்றும் மிக்கவராகத் தம்மைக் காட்டிக் கொள்வார்கூட, ஆங்கிலமறியாதவரை உள்ளத்தில் அவமதிப்பதைக் குறிப்பால் உணரலாம்.

வடநாட்டில் இந்தி வெறியிருப்பதால், தென்னாட்டிற்போல் நாட்டு மொழி யவமதிப்பில்லை. ஆயின், அளவிறந்த, அடாத ஆங்கில வெறுப்பை அந்நாட்டார் கொண்டுள்ளது அருவருக்கத்தக்க செயலாகும். ஆங்கிலத்தின் மீது ஒருவர் எத்துணை வெறுப்புக் கொண்டிருப்பினும், அதனாற் பெறும் பயனைப் பெறுதுவிடுவது, குளத்தோடு கோபித்துக்கொண்டு குளியாமற் போன செயலேயாகும். ஆதலால், அறிவியன் மொழிக்கும் அன்மொழிக்கும் வேறுபாடறிந்து, ஆங்கிலத்தைக் கடைப்பிடிக்க. காலஞ் செல்லச் செல்ல ஆங்கிலப் பரப்பு விரியுமேயன்றிச் சுருங்காது. ஆகவே, ஆங்கிலத்தை அகற்றக் கருதுவார், அதை அகற்றுவாரே (அகலிக்கச் செய்வாரே)யன்றி அகற்றார் (நீக்கார்).

ஏஜண்டுகள் தேவை

ரத்னா சுகபேதி அல்வா
(FRUIT-LAX)

பெரியோர்கள் முதல் குழந்தைகள் வரை சாப்பிடக் கூடியது. (இனிப்புள்ளது).

மாதிரி சாப்பில் இலவசம்.

விபரத்துக்கு
சம்பு இண்டாஸ்ட்ரீஸ், சேலம்-2.

பொய்கையும் தீயும் ஒன்றே

அவன், வைகை பாய்ந்து வளங் கொழிக்கும் பாண்டித் திருநாட்டின் வேந்தர் வேந்தன்—பூதப்பாண்டியன்.

அவள், பெருங்கோப் பெண்டு—பூதப்பாண்டியனின் பட்டத்துத் தேவி. பெருங்கோப்பெண்டு என்பதும், பட்டத்துத் தேவி என்பதும் ஒன்றே. அரசமா பத்தினி என்பதே அதன் பொருள்.

பூதப்பாண்டியனும், அவனுடைய பட்டத்துத் தேவியும், இணைபிரியாக் காதல் மிக்கவர்கள்.

இருவரும் செந்தமிழ்த் துறை போய புலவர்கள் மட்டுமல்லர், புலவர்களுக் கெல்லாம் புகலிடமாய்த், தாயகமாய், நண்பராய், விளங்கி வந்த அறிவும் திருவுமிக்க புரவலர்கள்.

பூதப்பாண்டியனும், அவனுடைய அரசமாதேவியும், எங்கு சென்ருலும் இணைபிரியாமல் கூடவே செல்வது வழக்கம்.

அவர்களுடைய அரண்மனை இருந்த திருநகரம், செல்வச் செழிப்பு மிகுந்தது. அதனுல், அது, இரவும் பகலும் இடையருக் காவல் மிகுந்த கடி நகராய் விளங்கியது.

வளமிகுந்த வியன் நகரம்; ஆதலால் அங்கே பல்வேறு கலைஞர்களும் வாழ்ந்திருந்தனர். அவர்களில், இசை பயிலும் கலைவல்லார் அதிகம். அதனுல், இரவும் பகலும் மத்தள ஓசை இடையீடின்றி முழங்கிக் கொண்டிருக்கும்.

இந்தகைய ஆரவாரம் மிகுந்த நகரத்தில்—அரண்மனையில் அமைச்சர்கள் அரசாங்க அலுவலர்கள், ஏவலர்கள். காவலர்கள், எல்லாரும் இருப்பர்.

அந்தப் புரத்தில் பாங்கியர் புடைசூழ அரசமா பத்தினி இருப்பாள்.

எத்தனை இருந்தாலும் பூதப்பாண்டியனும் இருந்தால்தான் பட்டத்துத் தேவிக்கு இந்த உலகில் இருப்பதாக எண்ணம் இருக்கும்.

அவன். சிறுபொழுது இல்லை என்ருலும், அவள், தனிமையைப் பொறுக்க மாட்டாதவளாகி. உயிர் தளர்ந்து குன்றிப் போவாள்! அத்தனை காதல்!

அந்த உலையாத காதலுக்குச் சோதனை நாள் வந்தது!

பூதப்பாண்டியன் இயற்கை எய்தினுன்.

அமைச்சர்கள் அழுதார்கள்; அரசாங்க அலுவலர்கள் அழுதார்கள்; புலவர்கள் அழுதார்கள்; பாண்டிய நாடே அழுதது.

நகருக்கு அருகே மலையின் அடிவாரம். அழகிய மான் கூட்டங்கள் நிரை நிரையாகப் படுத்துறங்க, மந்திகள் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கும் விசாலமான பெருங்காட்டு வெளி.

அந்த இடத்தில், யானைகளால் சேகரித்து வரப்பட்ட உலர்ந்த காட்டு விறகை அடுக்கி, அதன்மீது, உலகளந்த பெருந்தமிழும், பேரறிவும், வானளாவிய பெரும்புகழும், பெருவீரமும், பட்டத்துத் தேவியின் உலைவில்லாப் பெருங்காதலும், நிலை பெற்றுத் திகழ்ந்த பூதப்பாண்டியனின் பொன்னுடல் கிடத்தப்பட்டது. கானகத்துக் குறவப் பெருமக்கள் தீக்கடை கோலால் உண்டாக்கிய செந்தீயை, பூதப்பாண்டியனின் உடல் கிடந்த விறகுப் படுக்கையில் மூட்டினர்.

இந்த நிலைமையில், செருக் களத்திலோ, அரச காரியத்திலோ, சிறு பொழுது பிரிந்து செல்ல நேரிட்டாலும், உயிர்துடிக்கும் மாளாக் காதல் கொண்ட அரசமாபத்தினி என்ன செய்வாள்!

கணவன் உடலைக் குளிப்பாட்டும் போதே தானும் குளித்தாள். நீர் ஒழுகும் கருங் கூந்தல் முதுகில் புரள, மையுண்ட கருங்குவளைக் கண்கள், ஆருத் துயரத்தால் அழுதழுது சிவந்து வெந்நீர் சொரிய கணவனை எடுத்துச் சென்ற பாடையுடன் கூடவே சென்ருள். கணவன் உடலுக்குத் தீமூட்டிய உடனே, தானும் உடன்கட்டையேற - கணவனுடன்கூடவே வெந்துமடிய ஓடினுள்.

அமைச்சர்கள், அறிஞர்கள், புலவர்கள், சான்ருேர்கள் தடுத்தனர்.

அம்மையே அரசர் பெருந்தேவியே, செந்தமிழே உருவெடுத்து வந்தாற் போலிருக்கும் தாங்கள், உடன்கட்டையேறி உயிர்நீத்துவிட முனைந்திருக்கிறீர்களே, இது சரியா?

அரசர்தான் எங்களைக் கைதவற விட்டுச் சென்ருர் - விதிவசத்தால்! நீங்களுமா எங்களைக் கைவிட்டுச் செல்லவேண்டும்?

அன்னையே, நாங்கள் என்ன தீவினை செய்தோம்? எங்களுக்குத் தந்தையாய், தாயாய், தெய்வமாய் விளங்கி இருந்த நீங்கள், இருவரும், ஒரே நேரத்தில் எங்கள் நெஞ்சத்தில் ஆருப் பெருந்தீயை அள்ளிக் கொட்டி விட்டுச் செல்லலாமா?

எத்தனையோ தாய்மார்கள், அவர்களுடைய காதல் கணவன் இறந்த பின்பும், உயிர்வாழ வில்லையா தாயே!

அதுபோல், அரசரை இழந்து பரிதவிக்கும் எங்களுக்கு ஓர் ஆறுதலாய் தாங்களாவது உயிர் வாழ்வேன் என்று அருள்புரியுங்கள் தாயே! தங்களுடைய பொன்போன்ற மெல்லுடல், இந்தச் செந்தீயில் உயிரோடு வெந்து கருகுவதை காணும்படி செய்யாதிருங்கள் தாயே! என்றனர்.

அந்த கற்பும், பொற்பும், புலமையும் செறிந்த வீரமாதேவி—கோப்பெரும் பெண்டு சொன்னுள்;—

பல்வேறு சான்ருேர்களே! பல்வேறு சான்ருேர்களே! "உனது பெருங் காதற் கணவனுடன் நீயும் போய்ச் சேர்" என்று வாழ்த்தி விடை கொடுக்காமல் 'போகாதே' என்று தடை செய்யும், பொல்லாத வஞ்சக நெஞ்சங் கொண்ட சான்ருேர்களே!

அணில் உடல் போன்ற வரிகள் மலிந்த வெள்ளரிக்காயை, வாளால் அறுத்தெடுத்த அதன் விதைகளைப் போல், நெய்ப் பசை சிறிதுமின்றி, ஊறிக்கிடந்த பழஞ் சோற்றைப் பிழிந்து வைத்து, வெண்மையான எள்ளை அரைத்துச் சாந்தாக்கி, வேளைக் கீரையில் கலந்து புளியிட்டுச் சமைத்த கறியுடன் உணவாக உண்டு, பருக்கைக் கற்களை படுக்கை போல் பரப்பி, அதன் மீது பாய்கூட விரிக்காமல் படுத்துறங்கிக், கடுமையான கைமை நோன்புடன் உயிர் வாழ்ந்தால் போதுமென்று உயிருடன் இருக்கும் கோழைப் பெண் அல்லள் நான். திரண்ட தோள்களை உடைய எனது மெய்க் காதற் கணவன் இறந்ததனுல், இந்தப் பெருங்காட்டில் உண்டாக்கிய சுடலைத் தீ, உங்களுக்கு நெருங்க முடியாத சுடு தீயாக இருக்கலாம்!

எனக்கோ, அது என் கணவன் எரிகின்ற நெருப்பாதலால், குளிர்ந்த பெரிய பொய்கையில், இதழ் மலர்ந்து பூத்த தாமரையும், இந்த நெருப்பும் ஒன்றே!

பல்சான்றீரே! பல்சான் றீரே!
செல்கெனச் சொல்லாது
ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப்
பல்சான் றீரே!
அணில் வரிக் கொடுங்காய்
வாள்போழ்ந்து இட்ட
காழ்போல் நல்விளர்
நறுநெய் திண்டாது
அடையிடைக் கிடந்த
கைபிழி பிண்டம்
வெள் எட் சாந்தொடு
புளிபெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி ஆகப்
பரற்பெய் பள்ளிப்
பாயின்று வதியும்
உயவல் பெண்டிரேம்
அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய
கருங்கோட்டு ஈமம்
நுமக்கரி தாகுக
தில்ல எமக் கெம்
பெருந்தோட் கணவன்
மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும்
தீயுமோர் அற்றே

(புறம் 246)

"யானை தந்த முளிமர விறகில்
கானவர் பொத்திய
ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை
வைகுதுயில் எடுப்பி
மந்தி சீக்கும்
அணங்குடை முன்றிலின்
நீர்வார் கூந்தல்
இரும்புறம் தாழப்
பேரஞர்க் கண்ணள்
பெருங்காடு நோக்கித்
தெருமரும் அம்ம!
தானேதன் கொழுநன்
முழவுகண் துயிலாக்
கடியுடை வியனகர்ச்
சிறிநனி தமியள் ஆயினும்
இன்னுயிர் நடுங்கும்தன்
இளமை புறங் கொடுத்தே"

(புறம் 247)

பழந்தமிழ் வைப்பாகிய புறநானூற்றில், இந்தத் துயரமிக்க வரலாறு காணப்படுகிறது.

இதில். முன்னதாகிய 246-ம் செய்யுள், தீப்பாய்ந்தவளாகிய அரசமாதேவி, தன் வாயாலேயே பாடியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. பின்னதாகிய 247-ம் செய்யுள், தீப்பாயும் போது உடனிருந்த மதுரைப் பேராலவாயார் என்னும் புலவர் பெருமான் பாடியதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

அரசமாதேவியின் செய்யுளிலிருந்து, அவளுடைய கற்பு, காதல், கல்வி, ஆகியவற்றின் சிறப்பையும் திண்மையையும் காண்கிருேம். அத்துடன் கைமை நோன்பின் கடுமையும், புலவர்களின் மாருத அன்பும் அரச குடும்பத்துர் உறுப்பினராகவே ஒன்றியிருந்த பெருமையும் காண்கிருேம். அவர்களுடைய சோகம் நம்மையும் கப்பிக் கொள்வதை உணர்கிருேம். ★

அருப்புக்கோட்டை
எம். எஸ். இராமசாமி

வெண்பாப் போட்டி

தேடிக் கொணர்ந்த திரு.

காரைக் குடிசுற்றிக் கல்லூரிக் கூடமதாய்
ஊருக் கறிவூட்டி உள்ளதுகாண் !-பாருக்கே
நாடி வழிகாட்டும் நல்லார் அழகப்பர்
தேடிக் கொணர்ந்த திரு !

—செ. ஞானபூபதி, காரைக்குடி-3.

கிள்ளை மொழியுடனே கெண்டை விழிகாட்டி
உள்ளமெல் லாஞ்சேர உண்டனையால்-கள்ளமுடன்
ஊடி வதைக்காதே உயிர்க்கனலே நீயேயான்
தேடிக் கொணர்ந்த திரு.

—கே. வி தாட்சாயணி, எம். ஏ. சென்னை-5.

உடலை மறைக்க உடையில்லை ! இல்லை,
குடலை நிரப்புதற்குக் கூழும் !-வடவரிடைக்
கோடிக் கணக்கில் குவிகிறதே ! நாமுழைத்துத்
தேடிக் கொணர்ந்த திரு.

—மா. மலையழகன், காஞ்சிபுரம்.

சென்னை நகரசபை தேர்ந்து ஸ்ரீதன்னை
மென்னி பிடித்தே வெளியேற்ற-சின்னவிடம்
நாடி மலர்ந்ததுவே நன்மலராய் நம்மேயர்
தேடிக் கொணர்ந்த திரு.

—ச. கலைமதி, விருதுநகர்.

தென்னர் 'திரு'இருக்க 'சீ'ஆட்சி ஏன்?என்று
சென்னை நகரமன்றம் தேர்ந்ததே !-இன்றும்ஏன் ?
கூடி 'ஸ்ரீ'முன் குலவுகிறீர் ! கண்கலங்கத்
தேடிக் கொணர்ந்த திரு.

—அருப்பைக்கிழார்.

நீலக் கடல்தாண்டி, நெஞ்சில் இடங்கொண்ட
வாலைக் குமரியெனை வாடவிட்டு-ஞாலத்தில்
ஓடும் பொருள்தேடி ஓடினீர்; எங்கேநீர்;
தேடிக் கொணர்ந்த திரு;

—முத்தூரான், பொள்ளாச்சி.

பாடி மகிழ்வித்த பாவை கனியிதழாள்
நாடி எனக்களிப்பாள் நற்சுகமென்(று)-ஓடினேன்,
'ஆடி' எனச்சொல்லி ஆத்தாள் அகம்போனாள்
தேடிக் கொணர்ந்த திரு.

—தி. பார்வதி, சென்னை-7.

ஆடும் திரைப்படமும் ஆட்டுவிக்கும் மின்னியலும்
ஓடும் புகைவண்டி உந்துவண்டி-பாடிநிற்கும்
வானொலியும் பற்பலவும் வந்தாண்ட மேல்நாட்டார்
தேடிக் கொணர்ந்த திரு !

—புதுவை இரத்தினசனார்த்தனன், தாம்பரம்.

வடமொழியைக் கற்க மறிபொருள்தந் தாலும்
தொடுவானோ நல்லதமிழ்த் தோன்றல் ?-துடியிடையார்
நாடிப் பெறுவாரோ நாயகனல் லாவயலான்
தேடிக் கொணர்ந்த திரு.

—நாஞ்சில் ஆ. ஆரிது.

வள்ளுவமும் கீழ்க்கணக்கும் வாய்த்த தொகைநூலும்
அள்ளக் குறைந்திடுமா ஆருயிரே ?-தெள்ளுதமிழ்
பாடிவரும் இந்நூற்கள் பண்டோர் தமிழ்மொழிக்குத்
தேடிக் கொணர்ந்த திரு.

—பழநி. முத்துதாசன் சென்னை-30.

இன்பமுடன் ஈராண்டே ஈழத்தில் வாழ்ந்தனனல்;
துன்பம் இழைத்தார்; துரத்திவிட்டார்;-தென்னகத்தை
வாடியமெய்யுடனே வந்தடைந்தேன்; சேயிரண்டே
தேடிக் கொணர்ந்த திரு.

—முகில்வண்ணன், செய்துங்கநல்லூர்.

நீராவி வண்டியும் நின்றெரியும் மின்விளக்கும்
தீராத நோய்க்குத் திருமருந்தும்-சீரோடு
நாடி நமக்களிக்க நல்லறிஞர் நுண்ணறிவால்
தேடிக் கொணர்ந்த திரு.

—இள. க இளந்திரையன், திருபுவனைபாளையம்.

ஏலம் மணக்குதுபார் ! இஞ்சி கிராம்பைப்பார் !
கோலமயிற் பீலி,கரிக் கொம்பைப்பார் !-வேல்விழியே !
போடிமலைச் சாரலுக்குப் போனதால் நானுனக்குத்
தேடிக் கொணர்ந்த திரு.

—போடி-மீராமன்னன், மதுரை.

பன்னாட் பசித்தோர்க்கும் பாமரர்க்கும் ஏழைக்கும்
மன்னு தமிழ்கற்ற மாண்பார்க்கும்-தன்னுடலம்
ஓடக்கால் கையற்ற ஊனர்க்கும் ஈவீர்நீர்
தேடிக் கொணர்ந்த திரு.

—பனசை. சு. சடையப்பன், சென்னை-15.

ஈந்தாலும் தீராமல் எந்நாளும் மாறாமல்
சார்ந்தோரைச் சான்றோராய்த் தாமாக்கி-மாந்தர்க்குக்
கோடிவளஞ் சேர்க்கும் குறள்நூலே வள்ளுவனார்
தேடிக் கொணர்ந்த திரு.

—செ. கிருஷ்ணசாமி, சுவால்பேட்டை.

கொஞ்சும் மொழிபகர்ந்து, கொவ்வை இதழ்விரித்தென்
நெஞ்சம் புகுந்து நெளிந்தாடி-மஞ்சத்தில்
கோடிச் சுவையளித்துக் கொண்டாளே வேசியான்
தேடிக் கொணர்ந்த திரு.

—பாப்பா, காமாட்சிபுரம்.

கூடியொரு பாரதமாய்க் கோலோச்சி நன்மைகளை
நாடித் தருவமென நந்தமிழ்க்குக்-கேடிழைக்க
பேடி அமைச்சரே ! பிச்சையிந்தி தானநீர்
தேடிக் கொணர்ந்த திரு.

—அழகம்மாள் செல்லமுத்து, திருக்கோகர்ணம்.

உருசிய நாட்டினர்க்கு ஒண்டமிழின் குன்றாப்
பெருமையைக் கூறிப் பெயர்ந்தார்-கருமமே
நாடிச் சிதம்பரனார் நற்புகழே நம்மொழிக்குத்
தேடிக் கொணர்ந்த திரு.

—மு. அப்துல் அமீது, பொம்மநல்லூர்.

இழுமென் ஒலியும், இலங்கும் அணியும்,
விழுமக் கருத்தும் விளங்க-விழுமியோர்
பாடிக் கொணர்ந்தநற் பாவனைத்தும் செந்தமிழ்க்குத்
தேடிக் கொணர்ந்த திரு.

—கு. மாவண்ணல், குடியேற்றம்.

கோடிப் பொருளும் குறையாத பொற்குவையும்
மாடி மனையெல்லாம் மாண்பல்ல;-பீடுறவே
நாடி யகத்தெடுத்த நாற்குணமே நங்கையவள்
தேடிக் கொணர்ந்த திரு

—வசந்தகுமார், சென்னை-12.

நாகாவா மன்னரவர் நம்தமிழைத் தூற்றியதால்
பூகாக்கும் மன்னன் புகழ்ச்சேரன்-மேவாரைச்
சாடிச் செருக்கழித்துத் தந்ததொரு வென்றியன்றோ
தேடிக் கொணர்ந்த திரு.

—ப. ஆதிமூலம், கிருட்டினபுரம்.

தேவ வடபாடை செய்த மனுநீதி
பாவக் குலம்பிரித்த பன்னடை;-யாவருமே
கூடி மகிழ்வழிகள் கூறும் தமிழ்க்குறளோ
தேடிக் கொணர்ந்த திரு.

—செல்வக்கிழான், சென்னை-1.

வாசுகியவ் வள்ளுவரால் மாசுகம்பெற் றுள்நீயும்
வா,சுகியென் பாள்யான் மறுத்தாலும்-ஆசைமிகக்
கூடிப் புணர்ந்திடுவாள் கொஞ்சிவினை யாடுவள்யான்
தேடிக் கொணர்ந்த திரு.

—க. தவசியானந்தம், அருப்புக்கோட்டை.

ஞாயிறுந் தண்மதியும் ஞாலமகள் பெற்றதிரு
பாய்ந்தோடுங் காவேரி பைந்தமிழ்த்-தாயகத்தைப்
பாடிட வந்ததிருப் பைங்கொடியே நீதான்நான்
தேடிக் கொணர்ந்த திரு.

—ஆசிரியர் சுருளிச்சாமி, சில்லமரத்துப்பட்டி.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.